# பாட்டிலே காந்தி கதை




குழந்தைக் கவிஞர்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode


**No Copyright**


The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.


பாட்டிலே
காந்தி கதை


குழந்தைக்கவிஞர்:
அழ. வள்ளியப்பா

மத்திய அரசின்
பரிசு பெற்றது



# பாட்டிலே
# காந்தி கதை

குழந்தைக் கவிஞர்
அழ. வள்ளியப்பா

# Paattile Gandhi Kathai

(Story of Gandhiji in verse for children)


| | | |
|---|---|---|
| Author | : | AL. Valliappa |
| Illustrator | : | 'Sagar' |
| Publisher | : | Kulandai Puthaka Nilayam, Madras-40 |
| Sole Distributor | : | Paari Nilayam, Madras-108 |
| Printer | : | Jeevan Press, Madras-5 |
| First Edition | : | October, 1968 |
| Second Edition | : | October, 1988 |
| Price | : | Rs. 12.50 |

விலை ரூ. 12-50

பாரி நிலையம்
184. பிராட்வே · சென்னை · 600108

**காந்தியுகக் கவிஞர்**

உயர்திரு. நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை

அவர்களின்

## வாழ்த்து

மாந்தர்கள் உலகினிலே—எங்கும்
மகிழ்வுடன் குலவிடவும்
போர்பயம் நீங்கிடவும்—மனிதப்
பொறுப்புகள் ஓங்கிடவும்
மதவெறி மொழிவெறியும்—மற்றும்
இனவெறி அழிவுறவும்
அன்பறம் செழித்திடவும்—கெட்ட
அகந்தையை அழித்திடவும்
சாந்த குணம்வேண்டும்—அத்துடன்
சத்திய மணம்வேண்டும்.
அத்தகு நல்லறிவை—எளிதில்
அளித்திட வல்லதெனும்
பள்ளிப் படிப்பினையே—இளைஞர்கள்
பயின்றிடக் கொடுப்பதுவாய்
கதைகளைச் சொல்வதுவே—மிக்க
களிப்புள கல்வியதாம்.
அதற்குள சிறந்தகதை—காந்தி
அண்ணல் பிறந்தகதை.
காந்தியின் சரித்திரந்தான்—சிறந்த
கல்வியை விரித்துரைக்கும்.

அந்தச் சரித்திரத்தை—நல்ல
அறிவுப் பொருத்தமுடன்
'பாட்டிலே காந்திகதை'—எனப்
படங்களும் சேர்ந்ததுவாய்

அறிஞர்கள் மெச்சும்படி—வெகு
அழகுற அச்சடித்த
இளைஞர் இலக்கியத்தைப்—பொலிவுற
இயற்றிய நலக்குரியான்

'குழந்தைக் கவிஞர்'எனத்—தமிழ்த்தாய்
குலவிடும் தவப்புதல்வன்
தெள்ளிய பாவாணன்—அழ
வள்ளியப் பாவென்னும்

அன்புள என்நண்பன்—கற்றுணர்ந்(து)
அடங்கிய மனப்பண்பன்.
குழந்தை எழுத்தாளர்—சங்கம்
கூட்டி வளர்த்தவனாய்,

சிறப்புள எழுத்தாளர்—பலர்
தோன்றிட வழிசெய்தோன்.
கவித்திறம் வளர்ந்திடவும்—அதில்
கலைத்திறம் கிளர்ந்திடவும்

சீரும் சிறப்போடும்—மிக்க
செல்வச் செழிப்போடும்
உடல்நலப் பலத்தோடும்—தெய்வம்
உறைகிற மனத்தோடும்

பல்லாண்டு வாழ்ந்திருக்க—வாழ்த்திப்
பரமனைப் பணிந்திடுவோம்.

—வெ. இராமலிங்கன்

'காந்தி மகான் கதை' ஆசிரியர் கலைமணி
உயர்திரு. கொத்தமங்கலம் சுப்பு அவர்களின்

# வாழ்த்து

பாட்டினில் காந்தி கதைபாடி—தமிழ்ப்
பண்பு நிறைந்த கவிபாடி,
நாட்டினில் பொய்கள் நலிந்தோடி—ஒரு
நல்ல பரம்பரை உருவாக,

அள்ளிக் குடித்திடும் நீர்போலே—மிகத்
தெள்ளத் தெளிந்த மொழியாலே,
பிள்ளைக்குப் பாலுடன் புகட்டிடவே—அழ
வள்ளியப் பாகவி பாடிவிட்டார்.

வள்ளியப்பா பாப் பள்ளியப்பா—அதில்
வாசித்த வன்ஒரு புள்ளியப்பா
பிள்ளைக்கெல் லாம்விடி வெள்ளியப்பா—அது
பெத்தவங் களுக்குத் தங்கமப்பா.

அன்னையர் இதனைப் படித்துவிட்டு—நல்ல
அமுதுடன் சேர்த்தே ஊட்டிடலாம்.
ஆராரோ பாடிடும் நேரத்திலே—தொட்டில்
ஆட்டிஇப் பாட்டைப் படிச்சிடலாம்.

பள்ளிக்குப் போகுமுன் பிள்ளையெலாம்—மனப்
பாடமாய் இதனைச் செய்துவிட்டால்,
பள்ளியில் நோய்கள் அணுகாது—பிள்ளை
பாதையை விட்டு விலகாது.

பிள்ளைக் கலிதீர்க்க வந்ததெல்லாம்—நம்
பிள்ளைக ளாகவே வாழுதற்கு
வள்ளியப் பாஇன்று பாடிவைத்த—காந்தி
வள்ளல் கதைஒரு வாய்க்காலாம்.

கஞ்சிக்குப் போட்டிடும் உப்பினிலே—நாம்
கடலைக் கண்டு களிப்பதுபோல்,
காந்தியின் கதையைச் சிறிதாக்கி—இவர்
கவியில் அகத்தியன் ஆகிவிட்டார் !

காந்தி மகானின் கதைபாடி—அதைக்
கண்ணீர் வார்த்து வளர்த்ததற்குக்
கைமேல் பலனைக் கண்டுவிட்டேன்—அடிக்
கன்றைக் கண்ட கதலியைப்போல்.

உள்ளூர்க் காரன் வள்ளியப்பா—தன்
உள்ளம் உருகிச் சொல்லியபா,
வள்ளி மணாளன் அருளாலே—என்றும்
வாழிய, வாழிய புவிமேலே.

—கொத்தமங்கலம் சுப்பு

'கலைமகள்' ஆசிரியர், செந்தமிழ்ச் செல்வர்

**உயர்திரு. கி. வா. ஜகந்நாதன்** அவர்களின்

# முன்னுரை

பாரத நாட்டிலே இராமபிரானுடைய கதை பரவி யிருப்பதைப் போல வேறு எந்தக் கதையும் பரவவில்லை. இராமனுடைய பண்பும் வீரமும் கருணையும் எத்தனை தடவை கேட்டாலும் படித்தாலும் அலுக்காதவை. மகாத்மா காந்தியின் கதையும் அதுபோலவே பாரத நாட்டு மக்களின் உள்ளத்தைக் கவரும் கதை. நிச்சயமாக இது நாளடைவில் இராமன் கதைக்குச் சமானமாக இந்த நாட்டில் பரவி மதிக்கப் பெற்று விளங்கப் போகிறது.

காந்தி மகானுடைய கதையை வருங்காலப் பரம்பரை யினராகிய குழந்தைகள் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும். உலகத்திலுள்ள பல்வேறு மொழிகளில் காந்தி மகானுடைய கதை வெளியாகியிருக்கிறது. தமிழ்நாட்டுக் குழந்தைகள் தெரிந்துகொள்வதோடு மட்டும் அல்ல; அடிக்கடி நினைப்பூட்டிக் கொள்ள வேண்டுமானால் கதை பாட்டு வடிவில் இருக்கவேண்டும்.

அன்பர் அழ. வள்ளியப்பா இந்த அரிய **"பாட்டிலே காந்தி கதை"** என்ற நூலைக் குழந்தைகளுக்காகவே இயற்றியிருக்கிறார். குழந்தைகளுக்காகப் பல பாடல்களைப் பாடிக் 'குழந்தைக் கவிஞர்' என்று தமிழ் மக்கள் அன்புடன் பாராட்டும் நிலையில் இருப்பவர் இவர். குழந்தையின் உள்ளப் பாங்கை நன்கு அறிந்து, அவர்களுக்கு எளிதில் விளங்கும் சொற்களை ஆண்டு, சிறிய சிறிய வாக்கியங்களை

அமைத்து இதைப் பாடியிருக்கிறார். குழந்தைகள் தாளம் போட்டு உற்சாகமாகப் பாடும் வகையில் பாடல்கள் அமைந்திருக்கின்றன. நீதிகளையும் தத்துவங்களையும் விரித்துக் கூறிச் சோர்வடையச் செய்யாமல் உணர்ச்சி யூட்டும் வகையில் நிகழ்ச்சிகளைச் சொல்லிக் கதையைப் பின்னியிருக்கிறார். குழந்தையோடு குழந்தையாகப் பழகிப் பெற்ற அநுபவமும், பாடிப் பாடிக் கைவந்த பழக்கமும் அழ. வள்ளியப்பாவின் பாடல்களுக்கு மதிப்பை உண்டாக்கியிருக்கின்றன. காந்தியின் மறைவைச் சொல்லும் பகுதி மிகவும் உருக்கமாக அமைந்திருக்கிறது.

குழந்தைகளின் உள்ளமென்னும் பீடத்தில் காந்தியின் புனித உருவத்தை நிறுத்துவதற்கு இதைவிடச் சிறந்த கருவி வேறு ஏதும் இல்லை. இதைப் பாடலாம்; தாளம் போட்டு ஆடலாம்; காந்தியின் தகைமையை எண்ணிப் பெருமை கொள்ளலாம்; நாமும் இப்படி வாழவேண்டும் என்ற ஆர்வம் கொள்ளலாம். குழந்தைகளுக்கு ஏற்ற புத்தகம்.

தமிழ் மக்கள் தம் குழந்தைகளுக்கு இந்தப் புத்தகத்தை வாங்கியளிப்பதைக் கடமையாகக் கொண்டால் குழந்தை களின் உள்ளத்தில் ஒளியுண்டாக்கியவர் ஆவார்கள்.

இறைவன் திருவருளால் குழந்தைக் கவிஞர் நீடூழி வாழ்ந்து, இன்னும் பல கவிதைகளைக் குழந்தை உலகத்துக்கு வழங்கவேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

காந்தமலை
சென்னை-28.

**கி. வா. ஜகந்நாதன்**
*18—10—1968*

# ஆசிரியர் முன்னுரை

1947-ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிறந்த அனைவருமே, நம் நாடு விடுதலை பெற்ற பிறகு பிறந்தவர்களே. தங்கள் தாய், தந்தையரைப்போல் அடிமை நாட்டிலே பிறக்காமல், சுதந்திர நாட்டில், சுதந்திர மக்களாய்ப் பிறந்தவர்கள் என்ற பெருமை அவர்களுக்கு உண்டு.

ஆயினும், "விடுதலை வாங்கித் தந்த காந்தித் தாத்தாவை நேரில் பார்க்கவில்லையே! அவர் வாழ்ந்த காலத்தில் வாழக் கொடுத்து வைக்கவில்லையே!" என்ற ஏக்கம் அவர்களுக்கு இருக்கிறது.

மகாத்மாவை நேரில் பார்க்காத போனாலும், அவர் வாழ்ந்த காலத்தில் வாழாத போனாலும், 'அவர் பிறந்த மண்ணிலே நாமும் பிறந்தோம்' என்ற பெருமை இந்திய மக்கள் அனைவருக்குமே உண்டு. ஆனால், அத்தகைய பெருமை பேசுவதோடு மட்டும் நின்றுவிட்டால், என்ன பயன்?

மகாத்மா காந்தி நம் எல்லோரையும் போலவே பிறந்தார்; வளர்ந்தார்; சிறுவயதில் சில தவறுகளும் செய்தார். ஆயினும், செய்த தவறுகளை உணர்ந்து பெரிதும் வருந்தினார்; மனம் திருந்தினார்; படிப் படியாக உயர்ந்தார்; உலகம் போற்றும் உத்தமராகத் திகழ்ந்தார்.

**உயிர்க ளிடத்தில் அன்பு வேணும்-தெய்வம்**
**உண்மை யென்று தான்அறிதல் வேணும்.**
**வயிர முடைய நெஞ்சு வேணும்-இது**
**வாழும் முறைமையடி பாப்பா.**

என்று வாழும் வழியைப் பாப்பாவுக்குக் கூறினர் பாரதியார். இந்த வழியிலே வாழ்ந்து காட்டியவர் மகாத்மா காந்தி. எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்தினர்: கடவுளே உண்மை, உண்மையே கடவுள் என்று ஓயாது கூறிவந்தார்; அநீதிகளை அறவழியில் அஞ்சாமல் எதிர்த்து வெற்றி கண்டார்.

மகாத்மா காந்தியின் வாழ்க்கையைக் குழந்தைகள் நன்கு அறிந்து கொள்ளவேண்டும், அவர் காட்டிய வழியிலே செல்லும் ஆசையை அவர்கள் உள்ளத்திலே ஊட்டி வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன் சிலர் காந்தியின் வாழ்க்கை வரலாற்றைக் குழந்தைகளுக்காக எழுதியிருக்கிருர்கள். நானும் என் பங்கை இந்தப் புத்தகத்தின் மூலம் ஓரளவு நிறைவேற்ற முயன்றிருக்கிறேன்.

காந்திஜி வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சியை, பதினன்கு ஆண்டுகட்கு முன்பு 'முதல் பேச்சு' என்ற தலைப்பில், 'தமிழ்நாடு' இதழில் எழுதினேன். அப்போது 'கரும்பு' என்ற சிறுவர் இதழின் ஆசிரியராயிருந்த திரு. **பூவண்ணன்**, காந்தியின் வாழ்க்கையில் நடந்த சுவையான நிகழ்ச்சிகளையெல்லாம் அதேபோல் பாடல்களாக எழுதித் தருமாறு கேட்டுக்கொண்டார். அவ்வாறே, சிலகாலம் நான் தொடர்ந்து 'கரும்பு' இதழில் எழுதிவந்தேன். காந்திஜி தென் ஆப்பிரிக்கா போவதற்கு முன்புவரை நடந்த நிகழ்ச்சிகளைத்தான் என்னல் எழுத முடிந்தது.

1957ல் 'கல்கி' இதழில் காந்திஜியின் வாழ்க்கையைச் சுருக்கமாக எழுதித் தரவேண்டுமென்றுர் 'கல்கி' அதிபர் திரு. **டி. சதாசிவம்** அவர்கள். அதற்கிணங்கி நான் எழுதிய 104 பாடல்களைத் தொடர்ந்து இரு இதழ்களில் சிறப்பாகப் பல படங்களுடன் வெளியிட்டார்கள்.

'கரும்பு', 'கல்கி' இரண்டிலும் வெளிவந்த பாடல்களுடன், மேலும் பல பாடல்களை எழுதி இந்த நூலைத் தயாரித்தேன்.

கன்னித் தமிழால் காந்திமகான் புகழ்பாடி, காந்தியுகக் கவிஞர் எனப் புகழ்பெற்றவரும், தமது பாட்டுத் திறத்தால் நாட்டு விடுதலைக்கு நற்பணி புரிந்தவருமாகிய நாமக்கல் **வெ. இராமலிங்கம் பிள்ளையவர்கள்**, உடல் சரியில்லாத நிலையிலும் என் முயற்சியைப் பாராட்டி ஆசி அருளினார்கள்.

'கிராம ராஜ்யம்' அமைய வேண்டுமெனக் காந்திஜி கனவு கண்டார். அத்தகைய கிராம ராஜ்யத்தின் கவிச் சக்கரவர்த்தியாக விளங்கவல்ல **கொத்தமங்கலம் சுப்பு** அவர்கள், 'காந்தி மகான் கதை'யைப் பட்டி தொட்டி களிலெல்லாம் மனமுருகப் பாடி மக்களை மேம்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டவர். அவர்கள் அன்போடு இந் நூலுக்கு வாழ்த்து வழங்கியிருக்கிறார்கள்.

தமது பேச்சாலும், எழுத்தாலும், நினைத்தவுடன் கவி பாடும் திறத்தாலும் தெய்வத் தொண்டும், செந்தமிழ்த் தொண்டும் இடையறாது செய்துவருபவரும், நல்ல பல எழுத்தாளர்களை உருவாக்கியவருமாகிய 'கலைமகள்' ஆசிரியர், செந்தமிழ்ச் செல்வர் திரு **கி. வா. ஜகந்நாதன்** அவர்கள் முன்னுரை அளித்திருக்கிறார்கள்.

நாடுபோற்றும் இந்நல்லவர்களின் வாழ்த்துக்கள் மேன் மேலும் நற்பணிபுரிய எனக்கு ஊக்கமளிக்கும் என்பதில் ஐயமில்லை.

வழக்கம்போல், அச்சுக்குக் கொடுப்பதற்கு முன்பு இப் பாடல்களை நண்பர்கள் சிலரிடம் கொடுத்துப் படித்துப் பார்த்துத் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டேன். கவிஞர் **சோமு**, கவிஞர் **பல்லடம் மாணிக்கம்**, சந்தக் கவிமணி **தமிழழகன்**, புலவர் அ. **அப்துல் கரீம்**, கவிஞர் **தேவநாராயணன்**, என் உடன் பிறந்த தம்பிபோல் என்றும் உதவிவரும் திரு. **தம்பி சீனிவாசன்** ஆகியோர் தங்களது பல வேலைக்களுக்கிடையே இப்பாடல்களைப் படித்துப் பார்த்துப் பல பயனுள்ள யோசனைகளைக் கூறினார்கள்.

காந்தியைப் பற்றி தொடர்ந்து பதினன்கு ஆண்டுகளில் நான் எழுதிய பாடல்களையெல்லாம் அவ்வப்போது சேகரித்துத் தொகுத்து, பிறகு நான் புத்தகமாக வெளியிட உதவியவர் என் இனிய நண்பர் திரு. **ரத்னம்** அவர்கள்.

குழந்தைகள் உள்ளம் கவரும் வகையில் அழகான ஓவியங்களை வரைந்து தந்தவர் தமிழகத்தின் சிறந்த ஓவியர்களில் ஒருவரான திரு. **சாகர்** அவர்கள். இப் புத்தகம் நல்ல முறையில் அச்சாகி வெளிவரப் பல்வகையிலும் உதவியவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் திரு **வெ. சுப. நடேசன்** அவர்களும் திரு. **ரத்னம்** அவர்களுமாவர்.

இவர்கள் அனைவருக்கும் என் மனங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

'காந்தி நூற்றாண்டு விழா'வில் இந்நூலின் முதற் பதிப்பைச் சிறுவருக்கு வழங்கும்படியான வாய்ப்புக் கிடைத்தது. அதை எண்ணிப் பெருமைப்படுகிறேன். இந்நூலுக்கு மத்திய அரசினர் பரிசளித்துப் பாராட்டினர். அதை நினைத்து மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்நூல் சிறுவர் உலகுக்கு ஓரளவாவது பயன்படுமாயின் என் மகிழ்ச்சி பன்மடங்காகப் பெருகும்.

குழந்தைகள் இன்பமே எனது இன்பம். அவர்களுக்குத் தொண்டு செய்வதே என் முக்கிய குறிக்கோள்.

'உமா இல்லம்'
ஏ. எல். 183, அண்ணநகர்.
சென்னை-40

**அழ. வள்ளியப்பா**

# பாட்டு வரிசை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | கண்ணனும் அண்ணனும் | ... | 17 |
| 2. | கண்ணனின் ஆசை | ... | 19 |
| 3. | காந்தி பிறந்தார் | ... | 21 |
| 4. | அம்மாவும் அப்பாவும் | ... | 23 |
| 5. | அம்மாவிடம் அன்பு | ... | 25 |
| 6. | அப்பாவின் புத்தகம் | ... | 28 |
| 7. | பள்ளியில் நடந்தது | ... | 30 |
| 8. | அரிச்சந்திரன் நாடகம் | ... | 34 |
| 9. | விளையாட ஒரு தோழி | ... | 36 |
| 10. | அபராதம் | ... | 39 |
| 11. | ஆடு கத்தியது | ... | 43 |
| 12. | மன்னிப்புக் கடிதம் | ... | 48 |
| 13. | அன்னையின் அனுமதி | ... | 53 |
| 14. | முதல் பேச்சு | ... | 56 |
| 15. | எதிர்ப்பு | ... | 58 |
| 16. | கப்பல் பயணம் | ... | 60 |
| 17. | நண்பரின் தொப்பி | ... | 62 |
| 18. | நண்பரின் கோபம் | ... | 64 |
| 19. | ஆங்கிலக் கனவான் | ... | 69 |
| 20. | யாரிடம் சொல்வேன் ? | ... | 73 |
| 21. | சமையல் வேலை | ... | 75 |
| 22. | முதல் வழக்கு | ... | 77 |

## பாட்டு வரிசை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | கண்ணனும் அண்ணனும் | ... | 17 |
| 2. | கண்ணனின் ஆசை | ... | 19 |
| 3. | காந்தி பிறந்தார் | ... | 21 |
| 4. | அம்மாவும் அப்பாவும் | ... | 23 |
| 5. | அம்மாவிடம் அன்பு | ... | 25 |
| 6. | அப்பாவின் புத்தகம் | ... | 28 |
| 7. | பள்ளியில் நடந்தது | ... | 30 |
| 8. | அரிச்சந்திரன் நாடகம் | ... | 34 |
| 9. | விளையாட ஒரு தோழி | ... | 36 |
| 10. | அபராதம் | ... | 39 |
| 11. | ஆடு கத்தியது | ... | 43 |
| 12. | மன்னிப்புக் கடிதம் | ... | 48 |
| 13. | அன்னையின் அனுமதி | ... | 53 |
| 14. | முதல் பேச்சு | ... | 56 |
| 15. | எதிர்ப்பு | ... | 58 |
| 16. | கப்பல் பயணம் | ... | 60 |
| 17. | நண்பரின் தொப்பி | ... | 62 |
| 18. | நண்பரின் கோபம் | ... | 64 |
| 19. | ஆங்கிலக் கனவான் | ... | 69 |
| 20. | யாரிடம் சொல்வேன் ? | ... | 73 |
| 21. | சமையல் வேலை | ... | 75 |
| 22. | முதல் வழக்கு | ... | 77 |


# காணிக்கை

என்

அருமைப் பெற்றோர்

அழகப்பச் செட்டியார்

உமையாள் ஆச்சிக்கு



# கண்ணனும் அண்ணனும்

கண்ணன் நல்ல பையன்—அவன்
காந்தி பிறந்த நாளில்
வண்ண மலர்கள் பறித்தான்—பெரும்
மாலை யாகத் தொடுத்தான்.

அண்ணன் அங்கே வந்தார்—"தம்பி,
அருமை யான மாலை !
அண்ணல் காந்தி கழுத்தில்—சூட்டி
அழகு பார்ப்போம்" என்றார்.

அண்ணன் கையைப் பிடித்தான்—தம்பி
ஆவ லாக நடந்தான்.
கண்ணைக் கவரும் பூங்கா—அதில்
காந்தி சிலையைக் கண்டான்.

அண்ணன் தோளில் ஏறி—தம்பி
அழகு மாலை போட்டான்.
கண்ணை மூடித் தொழுதான்—அந்தக்
காந்தி சிலையின் முன்னே.


அண்ணன் அருகில் கண்ணன்—சிலை
அடியில் அமர்ந்து கொண்டான்.
எண்ணிப் பார்த்தான் ஏதோ—உடன்
ஏக்கத் தோடு கேட்டான்:

# கண்ணனின் ஆசை

அண்ணு, அண்ணு, காந்தித் தாத்தா
அருகில் சென்ற துண்டோ?—நீ
அவரைப் பார்த்த துண்டோ ?

கண்ணு, இந்தக் கண்ணு லேயே
காந்தி ஜியைக் கண்டேன்—என்
கண் குளிரக் கண்டேன்.

அண்ணு, அண்ணு, உன்னைப் போல
அதிட்டம் எனக்கே இல்லை—நான்
அவரைப் பார்த்த தில்லை.




கண்ணு, அவரின் புகழ் உடம்பைக்
காண லாமே இன்றும்—நீ
கலங்க வேண்டாம் என்றும்.

அண்ணு, காந்தி கதையைக் கேட்க
ஆசை மிகவும் உண்டு—அதை
அழகாய்ச் சொல்வாய் இன்று.

கண்ணு, உனது விருப்பம் போலக்
காந்தி கதையைச் சொல்வேன்—உன்
கருத்தில் பதியச் செய்வேன்.








## காந்தி பிறந்தார் !

ஆயிரத்து எண்ணூற்று
அறுபத் தொன்பதில்
அக்டோபர் இரண்டுமிக
முக்கிய நாளாம்.
நீயும்நானும் நமதுதேச
மக்க ளெல்லோரும்
நினைவில்வைத்துக் கொள்ளும்ஒரு
புனித நன்னாளாம்.

அந்தநாளே இந்தியர்க்கு
அதிட்டம் பிறந்தநாள் !
அந்தநாளே காந்திமகான்
அவத ரித்தநாள் !
தந்தையாகத் தலைவராகத்
தருமம் காக்கவே,
சத்தியமே குழந்தையாக
வந்து தித்தநாள் !






# அம்மாவும் அப்பாவும்

போர்பந்தர் என்னும்ஓர் ஊரினிலே—நல்ல
புத்திலி பாயின் வயிற்றினிலே
பார்புகழ் காந்தி பிறந்தனராம்—எல்லாப்
பையன்கள் போலே வளர்ந்தனராம்.

காந்தியின் அப்பாபேர் காபாகாந்தி—அவர்
கற்றதோ ஐந்தாம் வகுப்புவரை.
வேந்தர்க்கும் யோசனை கூறுகின்ற—திவான்
வேலையைப் பார்த்துமே வந்தனராம்.

படிப்பிலே புலியாய் இருக்கவில்லை—காந்தி
பரீட்சையில் முதன்மை பெறவும் இல்லை.
நடுத்தர மாகவே இருந்துவந்தார்—ஆனால்
'நல்லவன்' என்றே பெயர்எடுத்தார்.

சின்ன வயதிலே காந்திமகான்—பல
சிறந்த குணங்களைக் கற்றனராம்.
என்றும் அவற்றைக் கடைப்பிடித்தே—அவர்
எல்லார் நெஞ்சிலும் வாழ்ந்தனராம்.






# அம்மாவிடம் அன்பு

புத்திலி பாய்மிகப் பக்தியுடன்—தினம்
பூசைகள் செய்து வருபவராம்.
நித்தமும் சூரிய னைத்தொழுதே—அவர்
நிம்மதி யாகவே உண்பவராம்.

மாரி பொழிந்திடும் காலத்திலே—மேகம்
மறைத்திடும் அல்லவோ சூரியனை ?
சூரியன் தெரியாத நாட்களிலே—அன்னை
சோறு பலகாரம் உண்பதில்லை.




அன்னை எதுவுமே உண்ணவில்லை—என்றால்
அருமை மகன்காந்தி வாடிடுவார்.
என்னதான் அப்போது செய்திடுவார் ?—அதை
எடுத்துநான் கூறுவேன் ; கேட்டிடுவாய்.


வாசலி லேவந்து நின்றிடுவார்—அவர்
வானத்தை அண்ணாந்து பார்த்திடுவார்.
ஆசை யுடன்அவர் காத்திருந்தும்—மேலே
ஆதவன் எளிதில் வருவதில்லை.

சூரியன் ஒருவேளை தெரிந்ததெனில்—உடன்
துள்ளிக் குதித்துள்ளே ஓடிடுவார்.
ஆருயிர் அன்னையைக் கையுடனே—அவர்
அழைத்துக் கொண்டேஓடி வந்திடுவார்.

அம்மாவும் பிள்ளையும் வருவதற்குள்—அந்த
ஆதவன் மேகத்தில் மறைந்துகொள்வான்.
சும்மா திரும்பியே அன்னைசெல்வார்—ஆனால்
துக்கமோ. துயரமோ கொள்வதில்லை!

'இன்றுநான் உண்பதில் கடவுளுக்குச்—சற்றும்
இஷ்டம்இல்லை போலும்' என்றுரைத்தே
அன்னையார் வீட்டினுள் சென்றிடுவார்—காந்தி
அளவில்லாத் துன்பம் அடைந்திடுவார்.





# அப்பாவின் புத்தகம்


காந்தியின் தந்தையாம் காபாகாந்தி—அவர்
கண்ணிய மான ஒருமனிதர்.
சாந்தமும், நேர்மையும் உள்ளவராம்—என்றும்
சத்தியப் பாதையில் செல்பவராம்.


மேஜைமேல் புத்தகம் ஒன்றைவைத்தே—அவர்
வெளியினில் சென்றனர், அன்றொருநாள்.
ஆசையாய்க் காந்தி எடுத்தனரே—உடன்
ஆர்வமாய் அதனைப் படித்தனரே.

சிரவணன் என்றொரு மகனிருந்தான்—அவன்
தெய்வமாய்ப் பெற்றோரைக் கருதிவந்தான்.
குருடராய்ப் பெற்றோர் இருந்துவந்தும்—எந்தக்
குறையும் இல்லாமலே காத்துவந்தான்.

கண்ணில்லாத் தாயையும் தந்தையையும்
—தோளில்
காவடி கட்டியே தூக்கிச்சென்றான் ;
புண்ணியத் தலங்களைச் சுற்றிவந்தான்—அந்தப்
புதல்வனின் கதையைப் படித்ததுமே,

அன்னையை, தந்தையை உலகினிலே—மிக
அருமையாய்ப் போற்றிட வேண்டுமெனும்
உண்மையைக் காந்தி அறிந்தனராம்—அதை
உள்ளத்தில் நன்கு பதித்தனராம்.





## பள்ளியில் நடந்தது

பள்ளிக் கூடம் சென்று காந்தி
படித்து வந்த நாளிலே
வெள்ளைக் காரர் மொழியைக் கற்க
விருப்பம் சிறிதும் இல்லையாம்.

கல்வித் துறையில் வேலை பார்க்கும்
கைல்ஸ் என்னும் வெள்ளையர்
பள்ளிக் கூடம் வந்தார் அன்று
பார்வை யிட்டுச் செல்லவே.

வந்து காந்தி அமர்ந்தி ருந்த
வகுப்பைப் பார்த்துக் கூறினர் :
"ஐந்து வார்த்தை கூறு கின்றேன்.
ஆங்கி லத்தில் எழுதுவீர்."

'கெட்டில்' என்ற வார்த்தை தன்னைக்
கேட்ட வுடனே காந்தியும்,
சற்றே தயங்கிப் பின்னர் அதனைத்
தவருய் எழுத லாயினர்.

இதனைக் கண்ட ஆசான் உடனே
எடுத்துக் காட்ட வேண்டியே,
மெதுவாய்க் காந்தி காலின் மீது
மிதித்துச் சைகை காட்டினர்.

"அருகில் உள்ள பையன் அதனைச்
சரியாய் எழுதி இருக்கிறன் ;
திரும்பிப் பார்த்தே அவனைப் போலத்
திருத்த மாக எழுதுவாய்."

என்றே மெதுவாய்ச் சைகை மூலம்
எடுத்தே ஆசான் காட்டியும்,
ஒன்றும் அறியாக் குழந்தை போல
உணர்ந்தி டாமல் இருந்தனர்.



தம்மைத் தவிர வகுப்பி லுள்ளோர்
தவறில் லாமல் எழுதினர்,
என்ப தறிந்த காந்தி அதனை
எண்ணி எண்ணி வருந்தினர்.

வெள்ளைக் காரர் போன பிறகு
மெதுவாய் அந்த வாத்தியார்
கள்ளங் கபட மற்று நிற்கும்
காந்தி தன்னை அழைத்தனர்.

"பக்க முள்ள பையன் அவனைப்
பார்த்தே எழுது என்றுநான்
தக்க முறையில் சைகை செய்தும்
சற்றும் உணர வில்லைநீ"

என்றே ஆசான் எடுத்துக் கூறி
இடித்துக் காட்ட, காந்தியும்
ஒன்றும் வாயால் பேச வில்லை;
உள்ளம் பேச லானது :

"பிறரைப் பார்த்தே எழுதி நல்ல
பெயரெ டுக்கச் சொல்கிறார்.
தருமம் தானோ? இல்லை, இல்லை.
தவறே ஆகும் அல்லவோ?"

என்று சிறுவர் காந்தி மனத்தில்
எண்ணி நின்றார். ஆயினும்
என்றும் போல மதிப்புத் தந்தே
'எங்கள் ஆசான்' என்றனர்!



3135—3

# அரிச்சந்திரன் நாடகம்

அந்தக் காலம் காந்தி ஊரில்
அரிச்சந் திரனின் நாடகம்
வந்த செய்தி கேட்ட வுடனே
மக்கள் பார்க்கக் கிளம்பினர்.

அந்த நாட கத்தைக் காண
ஆவல் கொண்ட காந்தியும்
தந்தை யாரின் இசைவு பெற்றே
அன்று பார்க்கச் சென்றனர்.





அரச ஞக வாழ்ந்து வந்த
அரிச்சந் திரஞே, சூழ்ச்சியால்
அரசி ழந்து மனைவி மக்கள்
அடிமை யான நிலையிலும்,

'உண்மை ஒன்றே உரைப்பேன், இந்த
உயிரே போவ தாயினும்'
என்று சொன்ன காட்சி காந்தி
இதயம் தொட்டு விட்டது !

'உண்மை நானும் உரைப்பேன்' என்றே
உறுதி காந்தி கொண்டனர்.
கொண்ட தோடு வாழ்ந்தும் காட்டிக்
கோபு ரம்போல் உயர்ந்தனர்.

## விளையாட ஒரு தோழி !

போர்பந் தரிலே ஒருவணிகர்
பொன்னும் பொருளும் உடையவராம்.

அவரும், காந்தியின் அப்பாவும்
அருமை நண்பர். ஆதலினால்,

தங்களின் நட்பைப் பலப்படுத்தத்
தக்கதோர் வழியைக் கண்டனராம்.

வணிகரின் மகளை காந்திக்கு
மணம்செய் வதுதான் அவ்வழியாம்.


பெண்ணின் பெயரோ கஸ்தூரி.
பிள்ளையின் பெயரோ தெரிந்ததுதான்!

இருவரும் வயதில் சரிசமமே.
எத்தனை வயது, தெரிந்திடுமோ?

அதிகம் இல்லை; பதின்மூன்றே.
ஆடித் திரியும் சிறுவயதே.

திருமண நாளில் நம்காந்தி
சிரித்துக் குதித்துத் திரிந்தாராம்.

அழகழ கான உடைகளுடன்
அரசர் போலே நடந்தாராம்.



"பந்தல் போட்டுத் தெருமுழுதும்
பலவகைத் தோரணம் தொங்குவதும்,

கொட்டு முழக்கம் கேட்பதுவும்,
கூட்டம் கூடி இருப்பதுவும்,

விருந்துகள் பலவும் நடப்பதுவும்,
விதவிதச் செலவுகள் செய்வதுவும்

எனக்கா கத்தான்'' எனகாந்தி
எண்ணி எண்ணி மகிழ்ந்தாராம்.

சிறப்புடன் காந்தி—கஸ்தூரி
திருமண வைபவம் நடந்ததுவாம்.

திருமணம் என்றால் என்னவென்றே
தெரியா ததனுல் காந்தியுமே,

'ஆடிப் பாடி விளையாட
அகப்பட் டாளே ஒருதோழி.

இனிமேல் நமக்குக் கவலையில்லை'
என்றே எண்ணி மகிழ்ந்தாராம்!





# அபராதம்

காந்தி ஏழாம் வகுப்பினிலே
கருத்துடன் படித்து வருகையிலே

நடந்த நிகழ்ச்சி ஒன்றினையே
நானிப் பொழுது கூறுகிறேன் :

தேகப் பயிற்சி வகுப்பொன்று
தினமும் மாலையில் நடந்திடுமாம்.

மாணவர் அந்த வகுப்பிற்கும்
வந்திட வேண்டும் என்பதுவே

தலைமை ஆசான் உத்தரவாம்.
தடுத்துக் கூற முடிந்திடுமோ ?

அன்றைய தினமோ சனிக்கிழமை
அரைநாள் பள்ளி. ஆயினுமே

மாலையில் உண்டு பயிற்சியுமே
மாணவர் அனைவரும் வந்திருந்தார்.

அன்று நோயால் அவர் தந்தை
அதிகத் துன்பப் பட்டதனால்,

அருகில் இருந்து பணிவிடைகள்
அன்புடன் காந்தி செய்தனரே.

வானில் சூரியன் தெரியாமல்
மறைத்தது மேகம் அச்சமயம்.

வேளை தெரிந்து கொள்வதற்கும்
வீட்டில் இல்லை கடிகாரம்.

காலம் கடந்தே பள்ளிக்கு
காந்தி நடந்து சென்றனரே.

பயிற்சி முடிந்து மாணவர்கள்
பள்ளியி லிருந்து திரும்புவதை

வழியில் காந்தி கண்டனரே ;
வருத்தம் மிகவும் கொண்டனரே.

திங்கட் கிழமை பள்ளிக்குச்
சென்றதும், தலைமை ஆசிரியர்



காரணம் யாதெனக் கேட்டிடவே
காந்தி நடந்ததை நடந்தபடி

எடுத்துச் சொன்னார். ஆயினுமே
ஏனோ தலைமை ஆசிரியர்,

அவரது பேச்சை நம்பவில்லை.
அபரா தமுமே விதித்தனரே.

"ஐயோ, உண்மை சொன்னேன்நான்.
ஆயினும் என்னைப் பொய்யனென்றே

கருதினர் ஆசான். இதற்கெல்லாம்
காரணம் கவனக் குறைவேதான்."

என்றே காந்தி அச்சமயம்
எண்ணிக் கண்ணீர் சொரிந்தனரே.

"சத்தியம் பேசும் மனிதனுக்கு,
தகுந்த கவனமும் வேண்டு"மென

அன்றே காந்தி அறிந்தனரே;
அறிந்த படியே நடந்தனரே.



# ஆடு
# கத்தியது !



பள்ளிக் கூட நண்பன் ஒருவன்
பலத்தில் மிக்கவன்,
பக்கு வமாய் காந்தி யிடத்தே
கூற லாயினன் :
"வெள்ளைக் காரன் நம்மை அடக்கி
ஆண்டு வருவதும்,
வீர மாகக் காரி யங்கள்
செய்து வருவதும்,

ஆட்டுக் கறியும், மாட்டுக் கறியும்
தின்ப தாலேதான்.
ஐய மில்லை. இதனை நீயும்
அறிந்து கொள்ளுவாய்.


நாட்டை விட்டே அவர்கள் தம்மை
ஓட்ட விரும்பினுல்,
நாமும் நன்கு மாமி சத்தைத்
தின்ன வேண்டுமே.

ஒட்டி உலர்ந்த உனது தேகம்
உறுதி பெற்றிட
உண்ண வேண்டும் மாமி சத்தை,
தினமும் நீயுமே.
தட்டிச் சொல்ல நினைக்கி ருயோ ?
தயக்கம் ஏனடா?
தயவு செய்தே எனது சொல்லைக்
கேளடா'' என்ருன்.

''எங்கள் வீட்டில் எவரும் இறைச்சி
தின்ப தில்லையே.
இதற்கு நானும் இணங்கி ஞலும்
என்ன பயனடா ?
எங்கு வைத்து மாமி சத்தைத்
தின்று தீர்ப்பதோ ?''
என்று காந்தி அவனைப் பார்த்துக்
கேட்க லாயினர்.

"ஆற்றங் கரையை நோக்கி நாமும்
செல்ல லாமடா
அங்கு மறைவில் வைத்து நன்கு
தின்ன லாமடா.
நேர்த்தி யான பண்டம் ஆட்டு
இறைச்சி தானடா.
நிச்ச யம்நீ தின்ன வேண்டும்.
முடிவு கட்டடா."






திரும்பத் திரும்ப இதனை நண்பன்
கூறி வந்ததால்
திடம் இழந்து காந்தி முடிவில்
இணங்கி விட்டனர்.
மறுநாள் அந்த நண்பன் ஒற்றைக்
காகி தத்திலே
மறைத்து வைத்து மாமி சத்தை
எடுத்து வந்தனன்.

ஆற்றங் கரையை அடைந்தே அவர்கள்
மறைவில் அமர்ந்தனர்.
ஆட்டுக் கறியின் துண்டம் ஒன்றை
நண்பன் கொடுத்தனன்.
நாற்றம் பிடித்த ஆட்டுக் கறியைக்
கண்ணை மூடியே,
'லபக்'கென் றுடனே வாயில் போட்டு
விழுங்கி விட்டனர் !

நண்பன் இதனைக் கண்டு மிகவும்
மகிழ்ச்சி கொண்டனன்;
'நமது முயற்சி வென்ற' தென்றே
துள்ளிக் குதித்தனன்.
கண்ணை மூடி காந்தி இரவில்
தூங்கும் வேளையில்,
கனவு கண்டு மிகவும் நெஞ்சு
கலங்க லாயினர்.

வயிற்றுக் குள்ளே ஆடு வந்து
நிற்க லானது;
வாயை விட்டு 'மேமே' என்று
கதற லானது.
உயிரைக் கொன்றே ஊனைத் தின்னல்
தப்புத் தப்பென
உணர்ந்தார்; அதனை எண்ணி எண்ணி
உருக லாயினர்.





# மன்னிப்புக் கடிதம்

அண்ணன் இருவர் காந்தி யோடு
கூடப் பிறந்தவர்.
அவர்க ளுக்குள் ஒருவர் மிகவும்
செலவு செய்பவர்.
நண்பர் பலரும் சேர்ந்தே அவரைக்
கெடுத்து வந்தனர்.
நாட்கள் செல்லச் செல்ல, அண்ணன்
கடனும் பட்டனர்.

கடனைக் கொடுத்த நண்பர் சிறிது
காலம் பொறுத்தனர்.
கடிந்து பேசிக் கொடுத்த பணத்தைத்
திருப்பிக் கேட்டனர்.

உடனே அண்ணன் பட்ட கடனைத்
தீர்க்க வேண்டியே
யோசித் தாரே சிறுவர் காந்தி
அன்று முழுதுமே !

கடைசி யாக அறைக்குள் மெல்லச்
சென்றே அண்ணனின்
கையில் அணியும் காப்பில் சிறிது
வெட்டி எடுத்தனர்.
கடைக்குச் சென்றே அதனை விற்றுக்
காசாய் மாற்றினர்.
காசைக் கொடுத்துக் கடனைத் தீர்த்தே
வீடு திரும்பினர்.

காப்பை விற்றுக் கடனைத் தீர்த்தார்
காந்தி என்பதை,
கண்டு பிடிக்க வில்லை, வீட்டில்
உள்ளோர் எவருமே.
கேட்பா ரில்லை. ஆயி னும்நம்
காந்தி மனத்திலே,
கேள்வி பலவும் எழுந்து எழுந்து
வாட்ட லாயின.



3135—4

‘அரிச்சந் திரனின் நாட கத்தைக்
கண்டேன் நானுமே.
அவரைப் போல உண்மை பேச
நினைத்தேன் நானுமே.
பெரிய குற்றம் செய் து விட்டேன்.
ஐயோ, இதனைநான்
பிரிய முள்ள தந்தை யிடத்தில்
சொன்ன பிறகுதான்,

மனத்தில் அமைதி நிலவும்’ என்றே
காந்தி நினைத்தனர்.
வாயை விட்டுக் கூறு தற்கோ
மிகவும் அஞ்சினர்.
குணத்தில் உயர்ந்த தந்தை இந்தத்
திருட்டைக் கேட்டிடின்
கொள்ளு வாரே மிகுந்த வருத்தம்
என்று தயங்கினர்.


திரும்பத் திரும்ப காந்தி இதனை
எண்ணி எண்ணியே
செய்வ தேதும் அறிந் திடாமல்
திகைத்து நின்றனர்.

இறுதி யாக நடந்த தெல்லாம்
காகி தத்திலே,
இதயம் திறந்தே எழுத லானர்
உருக்க மாகவே.



"தந்தை யாரே, தங்கள் மனசு
நோகும் வகையிலே
தவறு செய்து விட்டேன்; மன்னித்
தருள வேண்டுமே.
எந்த நாளும் இதுபோல் தவறு
செய்ய மாட்டேன்நான்"
என்று கடித முடிவில் காந்தி
எழுதி யிருந்தனர்.

தந்தை யிடத்தே கடிதந் தன்னை
எடுத்துச் சென்றனர்;
தயக்கத் தோடு கொடுத்து விட்டுத்
தேம்பி அழுதனர்.
அந்தக் கடிதம் தன்னைப் பிரித்துப்
படித்துப் பார்த்ததும்
அன்பு மிக்க தந்தை யாரும்
அழுது விட்டனர் !



# அன்னையின் அனுமதி

பெருமை மிகுந்தநல் தந்தையுமே—ஐயோ !
பிரிந்தனர் நோயின் கொடுமையினால்.
அருமை மகனைப் படிக்கவைத்தே—நல்ல
ஆளாக்கத் தாயுமே ஆசைப்பட்டார்.

"காந்தியைச் சீமைக்க னுப்பிடலாம்—கல்வி
கற்றுப் பாரிஸ்டராய் வந்திடுவான்.
மாந்தரெல் லாரும் மதித்திடுவார்"—என்று
வயதான பெரியவர் ஒருவர்சொன்னார்.

"பாங்குடன் ஆங்கிலம் கற்றிடவும்—காந்தி
பாரிஸ்டர் பட்டம் பெற்றிடவும்
ஆங்கில நாடு செல்வதுதான்—மிக
அழ" கென நண்பரும் கூறினரே.



அண்ணனுமே இதை ஆதரித்தார்—ஆனால்,
அன்புள்ள அன்னை தயங்கினரே.
கண்ணுக் கெட்டாத ஓர் சீமையிலே—சென்று
காந்தி படிப்பதை ஏற்கவில்லை.

ஆங்கில நாட்டுக்குச் சென்றவர்கள்—பலர்
அருமைக் குணங்களை விட்டுவிட்டுத்
தீங்கான வழிகளில் சென்றதனுல்—மிகச்
சீரழிந் தாரெனக் கூறினரே.

அன்னை உரைத்ததைக் கேட்டதுமே—அவர்
அருகினில் சென்றுநம் காந்தியுமே,
"என்னைநீ நம்பிட வேண்டுமம்மா—நான்
என்றும் ஒழுங்காய் இருப்பேனம்மா.


மாமிசம் சாப்பிட மாட்டேனம்மா—தீய
வழிகளில் செல்லவே மாட்டேனம்மா.
சாமிக்குப் பொதுவாகச்சொன்னேனம்மா-இது
சத்தியம், சத்தியம், சத்தியமே."

என்றதும் அன்னை மகிழ்ந்தனரே—உடன்
இணங்கினர் மகனை அனுப்பிடவே.
அன்னையின் அனுமதி பெற்றதுமே—காந்தி
அளவில்லா ஆனந்தம் கொண்டனரே.

# முதல் பேச்சு

சீமைக்குச் செல்லவே திட்டமிட்டார்—காந்தி
சென்றிட ஏற்பாடும் செய்துவிட்டார்.
சேமமாய் காந்தியும் போய்வரவே—நண்பர்
தேநீர் விருந்தொன்று வைத்தனரே.

காலைமுதல் மாலை நேரம்வரை—வெள்ளைக்
காகிதம் தன்னில் அடித்தடித்து,
நாலுவரிகள் எழுதி வைத்தார்—காந்தி
நன்றி உரைத்திட வேண்டுமென்றே.



விருந்து முடிந்ததும் நண்பர்களில்—சிலர்
மெத்தவும் காந்தியை வாழ்த்தினரே.
இறுதியில் பையிலே கையைவிட்டு—காந்தி
எடுத்தனர் நன்றி உரைதனையே.

காகிதம் தன்னை எடுத்ததுமே—அவர்
கைகள் இரண்டும் நடுங்கினவே.
வேகமாய் வார்த்தைகள் வந்தனவா ?—இல்லை;
வேர்வை உடம்பை நனைத்ததுவே!

தொண்டை அடைத்தது; மேலும்அவர்
—சொன்ன
சொல்லும் உடைந்து சிதறியதே.
நன்றி உரைதனில் என்னசொன்னார்—என்றே
நண்பரில் யாருக்கும் புரியவில்லை!

நண்பர்கள் மத்தியில் பேசிடவே—அன்று
நடுங்கித் திணறிய காந்திமகான்
அந்நிய ரும்மிகப் போற்றிடவே—பல
ஆயிரங் கூட்டத்தில் பேசிவிட்டார் !

# எதிர்ப்பு

கடலைக் கடந்து செல்கிறார்
　　காந்தி என்று கேட்டதும்,
உடனே அவரின் சாதியார்
　　ஒன்று கூடி விட்டனர்.

கூட்டம் நடுவில் காந்தியைக்
　　கொண்டு வந்து நிறுத்தினர்.
நீட்டி முழக்கி அவரிடம்
　　நீண்ட நேரம் பேசினர்.


“கடலைத் தாண்டிச் செல்வதைக்
　　கருதினாலும் பாவமாம்.
விடுவாய் இந்த எண்ணமே.
　　விட்டு விடுவாய்” என்றனர்.

தாண்டிக் கடலைச் செல்வதில்
　　தவறே இல்லை என்பதை
வேண்டு மட்டும் அவரிடம்
　　விளக்கி காந்தி கூறியும்,

"சாதிக் கட்டுப் பாட்டினைத்
　　தகர்க்கும் உன்னை இன்றுடன்
சாதி விட்டு விலக்கியே
　　தள்ளி வைத்தோம்" என்றனர்.

இன்னும் அந்தச் சாதியில்
　　எவரும் காந்திக் குதவினால்,
தண்டம் செலுத்த வேண்டுமாம்!
　　தடை விதித்து விட்டனர்!

காந்தி இந்த மிரட்டலைக்
　　கண்டும் அஞ்ச வில்லையே.
சாந்த மாகத் திரும்பினார் ;
　　தமது பயணம் துவக்கினார்.





# கப்பல் பயணம்

சீமை நோக்கிக் கப்பலில்
        செல்லும் போது காந்தியும்
ஊமை போல இருந்தனர்.
        ஒருவ ரோடும் பேசிடார்.


'ஆங்கி லேயர் கூட்டமே
        அதிக மாக இருக்குதே.
ஆங்கி லத்தில் பேசினுல்
        அவர்கள் கேலி செய்வரே'

என்றே காந்தி கப்பலில்
எண்ணி மிகவும் தயங்கியே
ஒன்றும் பேசி டாமலே
ஊமை போல இருந்தனர்.

கப்பல் தன்னில் மாமிசம்
கலந்த உணவும் தந்ததால்
'தப்பித் தவறித் தின்றிடின்
தாயை ஏய்த்த தாகுமே !'

என்ற பயமே மனத்தினில்
எழுந்த தாலே காந்தியும்
ஒன்றைக் கூடத் தீண்டிடார்;
ஒதுங்கி ஒதுங்கிச் செல்லுவார்.

பம்பாய் நகரில் வாங்கிய
பழங்கள் பட்ச ணங்களை
நம்பி அந்தக் கப்பலில்
நாளை ஓட்டி வந்தனர்.



# நண்பரின் தொப்பி

லண்ட னுக்கு காந்தி வந்த
நல்ல செய்தி கேட்டதும்,
அன்றே டாக்டர் மேத்தா என்பார்
அவரைப் பார்க்க வந்தனர்.

வந்த வுடனே தமது தலையில்
வைத்தி ருந்த தொப்பியை
அந்த நண்பர் கழற்றி வைத்தார்,
அங்கி ருந்த மேஜையில்.

மிருது வான மயிரி னாலே
மேன்மை யாகச் செய்ததாம்
அருமைத் தொப்பி யதனைக் காந்தி
ஆவ லோடு எடுத்தனர்.

தொப்பி தன்னைக் காந்தி கையால்
தொட்டுத் தடவிப் பார்த்தனர்.
அப்போ தந்தத் தொப்பி மயிரும்
அடடா, கலைந்து போனதே !



கலைந்து போன தொப்பி தன்னைக்
கண்ட வுடனே மெத்தவும்
கலக்கத் தோடு மேத்தா முகத்தைக்
காந்தி பார்க்க லாயினர்.

''வேற்று மனிதர் பொருளை அவரின்
விருப்ப மின்றி எடுப்பதே
ஏற்ற தல்ல'' என்று கூறி
இன்னும் அந்த நாட்டிலே,

சிறந்த பழக்க வழக்கம் என்று
தெரிந்த வற்றை காந்தியும்
அறிந்து கொள்ளும் வகையில் மேத்தா
அன்பாய் எடுத்துக் கூறினர்.



## நண்பரின் கோபம்

சத்தி யத்தைக் காக்க வேண்டிச்
சைவ உணவே காந்தியும்
நித்தம் உண்டு வந்தார். அதனுல்
நேர்ந்த துன்பம் அதிகமாம்.

லண்டன் நகரில் வெள்ளைக் கார
நண்பர் ஒருவர் இருந்தனர்.
அன்பு கொண்டு காந்தி யோடு
அவரும் பழகி வந்தனர்.

காந்தி பட்ட துன்பம் யாவும்
கண்டார் நேரில். ஆதலால்,
"ஏன்தான் இந்த நாட்டில் வந்தே
இன்னல் பெரிதும் அடைகிறீர்!?

கூழும் ரொட்டித் துண்டும் வயிற்றைக்
கொஞ்ச மேனும் நிரப்புமோ ?
கோழிக் கறியும் ஆட்டுக் கறியும்
கொடுக்கும் நல்ல இன்பமே."

என்று தினமும் இடைவி டாமல்
எடுத்துக் கூறி வந்திடும்
அந்த நண்ப ரோடு காந்தி
அன்று வெளியே கிளம்பினார்.


லண்டன் நகரில் நடந்து வந்த
நாட கத்தைக் காணவே,
அன்று மாலை ஆவ லாக
அவர்கள் நடந்து சென்றனர்.

செல்லும் போது வழியில் இருந்த
சிறந்த உணவு விடுதியின்
உள்ளே காந்தி தம்மை நண்பர்
உடன ழைத்துச் சென்றனர்.



3135—5

குழம்பு ஒன்றை அவர்கள் முன்பு
கொண்டு வந்து வைத்ததும்,
பழக்க மில்லா காந்தி அதனைப்
பார்த்தே விழிக்க லாயினர்.



'இந்தக் குழம்பில் புலால் கலந்தே
இருக்கு மோ' என் றஞ்சியே
அந்த விடுதி ஆளை மெதுவாய்
அருகில் காந்தி அழைத்தனர்.

இதனைக் கண்ட நண்பர் உடனே,
“என்ன செய்தி?” என்றனர்.
அதிகத் தயக்கத் தோடு காந்தி
ஐயம் தன்னைக் கூறினர்.

அந்த நண்பர் கோபம் கொண்டே,
“ஐயோ ! உமக்குக் கொஞ்சமும்
இந்த நாட்டுப் பழக்க வழக்கம்
இன்னும் தெரிய வில்லையே !


பட்டிக் காட்டு மனிதர் போலப்
பலவும் கேட்டு வருகிறீர்.
வெட்கம், வெட்கம், உம்மை நினைத்து
மிகவும் வருத்தப் படுகிறேன்.

இங்கே இனியும் இருக்க வேண்டாம்.
எழுந்து வெளியே செல்லுவீர்.
எங்கோ தின்று விட்டு விரைவில்
இங்கு வந்து சேருவீர்.

உண்டு முடித்த பிறகு நானும்
உம்மை அழைத்துச் செல்கிறேன்.”
என்று கடுமை யாகக் கூற
எழுந்து காந்தி சென்றனர்.

இங்கும் அங்கும் அலைந்து பார்த்தும்
ஏற்ற உணவில் லாததால்
எங்கும் சாப்பி டாமல் காந்தி
ஏக்கத் தோடு திரும்பினார்.

அன்று பசியி னாலே இரவில்
அவதிப் பட்டார். ஆயினும்
அன்னை சொல்லைக் காத்தோம் என்றே
அகம் மகிழ்ந்தார் காந்தியும்!



# ஆங்கிலக் கனவான்

ஆங்கிலக் கனவான் போலேநாம்
ஆகிட வேண்டும் என, காந்தி

ஆசை கொண்டார். ஆதலினால்
காசைத் துணிந்தே செலவழித்தார்.

பம்பாய் நகரில் வாங்கியவை
பார்க்க அழகாய் இல்லையெனப்


புதுப்புது உடைகள் வாங்கினரே.
பூரிப் புடனே அணிந்தனரே.

'நடைஉடை பாவனை யாவிலுமே
நாம்ஒரு கனவான் ஆகிடுவோம்.

கனவான் ஆக முதல்முதலில்
கற்றிட வேண்டும் நடனமுமே'

என்றே காந்தி எண்ணினரே;
ஏற்ற ஒருவரை அமர்த்தினரே.

தினமும் அவரிடம் சென்றனரே.
சென்று நடனம் பயின்றனரே.



காலேக் கையை
ஆட்டிஅவர்
கருத்தாய் நடனம்
பயின்ருலும்,

சங்கீ தத்துக்
கேற்றபடி
சரியாய் ஆட
வரவில்லே !

'சங்கீ தத்தைக்
கற்ருல்தான்
சரியாய் நடனம்
ஆடவரும்'

என்றே காந்தி எண்ணினரே.
இதற்கொரு வழியும் கண்டனரே.

காசைக் கொடுத்துப் பிடில்ஒன்றைக்
கடையில் வாங்கினர் ஆவலுடன்.

ஆங்கிலப் பெண்மணி ஒருவரையே
அமர்த்தினர் கற்றுத் தந்திடவே.

அனுதினம் பிடிலேக் கற்றனரே.
ஆயினும் பயனைக் காணேமே!

மேடையில் ஏறி ஆங்கிலத்தில்
மிகமிக நன்ருய்ப் பேசிடவும்

பணத்தைக் கொடுத்தே ஒருவரிடம்
பயிற்சி பெற்று வந்தனரே.

ஒருநாள் காந்தி உள்ளத்தில்
யோசனை ஒன்று உதித்ததுவே.

'அண்ணன் அடிக்கடி பணத்தினையே
அனுப்புவ தெல்லாம் எதற்காக?

ஆங்கிலக் கனவான் ஆவதற்கா?
அவசிய மின்றிச் செலவிடவா?

பாங்குடன் படித்துப் பாரிஸ்டர்
பட்டம் பெறவே, ஆசையுடன்

அண்ணன் பணத்தை அனுப்புகிருர்.
ஐயோ, இதைநான் மறந்தேனே.

இன்றுடன் இந்தப் பயிற்சியெல்லாம்
எனக்குத் தேவை இல்லை'யென

முடிவு செய்தே ஆசிரியர்
மூவரும் அறியக் கூறினரே.

அவர்கள் இதனைக் கேட்டதுமே
அதிசய மடைந்தனர். அத்துடனே

காந்தியின் மனத்தை அறிந்தனரே ;
கடமை உணர்வைப் போற்றினரே.





## யாரிடம் சொல்வேன் ?

பட்டப் படிப்பை முடித்துக்கொண்டார்—காந்தி
பாரிஸ்ட ராகத் திரும்பி வந்தார்.
கட்டுக் கடங்காச் சமுத்திரமாம் — அதைக்
கடந்துமே பம்பாய் நகரடைந்தார்.

கப்பல் அடியிலே அண்ணன் நின்றார்—அவர்
காந்தியைக் கண்டதும் ஆவலுடன்,
"அப்பா, என் தம்பிநீ நலமுடனே—இங்கு
ஆண்டவன் அருளாலே வந்தடைந்தாய்"

என்றுநல் வரவுமே கூறினரே —ஆனால்
ஏனோ முகத்தில் பொலிவே இல்லை !
என்னதான் காரணம் என்பதனை — அண்ணன்
இனியும் மறைக்க விரும்பவில்லை.

அந்நிய நாட்டில் படிக்கையிலே—இங்கே
அன்னை இறந்தனர் என்பதனை
அன்றுதான் காந்தி அறிந்தனரே—உடன்
ஐயோ, அதிர்ச்சி அடைந்தனரே !

'கண்ணுக் கெட்டாத ஓர் நாட்டினிலே—சென்று
கல்வி பயின்றிடும் வேளையிலே
அன்னை இறந்தனர் என்பதனை—காந்தி
அறிந்திடின் உள்ளம் உடைந்திடுவார்'

அண்ணனும் இப்படி எண்ணியதால்—அவர்
அன்னையைப் பற்றி எழுதவில்லை.
'கண்ணேபோல் என்னையே காக்கும் அம்மா
—அன்று
கப்பலில் ஏறிநான் செல்லுமுன்னர்,

உன்னிடம் சத்தியம் செய்தேனம்மா—அதை
உறுதியாய்க் காத்துமே வந்தேனம்மா
என்றுநான் யாரிடம் சொல்வேனம்மா'—என
எண்ணி எண்ணிகாந்தி கண்ணீர்விட்டார்.

# சமையல் வேலை




வம்பு, வழக்கை எடுத்துக் கூறி
வாதம் செய்திடும்
வக்கீல் தொழிலை நடத்து தற்கு
நமது காந்தியும்
பம்பாய் நகரில் ஓரி டத்தில்
குடி இருந்தனர்.
பலகை ஒன்றில் 'வக்கீல்' என்றே
எழுதி மாட்டினர்.

தன்னந் தனியாய் இருந்த காந்தி
அந்த வீட்டிலே
சமையல் செய்ய வேலை யாளை
வைத்துக் கொண்டனர்.

'என்ன சமையல் ? மோசம், மோசம்!'
என்றே காந்தியும்
எண்ணும் வகையில் சமையல் செய்தான்
தினமும் அவனுமே.

சீட்டுக் கொடுத்தே அவனை உடனே
வீட்டுக் கனுப்பலாம்.
செய்ய வில்லை நமது காந்தி
அந்தச் செயலையே!
வேட்டி தன்னை வரிந்து கட்டிக்
கொண்டே அவனுடன்
மிகுந்த மகிழ்ச்சி யோடு சமையல்
செய்து வந்தனர்.

இங்கி லாந்தில் இருந்த சமயம்
அங்கே உள்ளவர்
எண்ணெய் அடுப்பில் சமையல் செய்யும்
முறையை நேரிலே
நன்கு அறிந்து கொண்ட தாலே
நமது காந்தியும்
நல்ல முறையில் சமையல் செய்தே
உண்டு வந்தனர்.



## முதல் வழக்கு

உண்மை யற்ற வழக்கை காந்தி
ஏற்ப தில்லையே.
ஒரு வழக்கும் தரகு கொடுத்துப்
பிடிப்ப தில்லையே.
இந்த முறையைக் கடைப்பி டித்த
கார ணத்தினல்
எவரும் அவரைத் தேடிக் கொண்டு
வருவ தில்லையே !

வழக்கில் லாமல் காந்தி இருந்த
அந்த நாளிலே.
மம்மி என்னும் அம்மை யாரின்
வழக்கு வந்ததே.
வழக்கம் போலே அதையும் நன்ருய்
ஆய்ந்து பார்த்தனர்.
வாய்மை யான தென்றே அதனை
ஏற்றுக் கொண்டனர்.

மொத்தம் அந்த வழக்குக் காக
மம்மி பாயிடம்
மூன்று பத்து ரூபாய் வேண்டும்
என்று கேட்டனர்.
ஒத்துக் கொண்டு காந்தி யிடத்தில்
அம்மை யாருமே
உடனே பணத்தைக் கொடுத்து வழக்கை
நடத்தச் சொல்லினர்.


அந்த வழக்கு நீதி மன்றம்
வந்த நாளிலே
ஆஜ ராகிப் பேச, காந்தி
எழுந்து நின்றனர்.

என்ன என்ன குறுக்குக் கேள்வி
கேட்ப தென்றுமே
எண்ணி யிருந்தும் எழுந்த போது
பேச வரவில்லை !

தொண்டை அடைத்துக் கொண்ட தாலே
அங்கே காந்தியும்,
சொல்வ தேதும் அறிந்தி டாமல்
விழிக்க லாயினர்.
கண்ணி ரண்டும் வேக மாகச்
சுழல லாயின.
கையும் காலும் கிடுகி டென்று
நடுங்க லாயின.

இதனைக் கண்டே அந்த நீதி
மன்றந் தன்னிலே
இருந்த பலரும் வாயை விட்டுச்
சிரிக்க லாயினர்.
அதனால் அதிக வெட்கம் கொண்ட
நமது காந்தியும்
அமர்ந்து விட்டார் ஆச னத்தில்.
ஐயோ, பாவமே !

கட்சிக் காரி இதனைக் கண்டு
கலக்கம் கொள்ளவே
காந்தி அந்த அம்மை யாரின்
அருகே சென்றனர்.



சட்டைப் பையில் இருந்த ரூபாய்
மூன்று பத்தையும்
தயக்க மின்றித் திருப்பிக் கொடுத்துக்
கூற லாயினர் :

‘‘என்னை முழுதும் நம்பி வழக்கைக்
கொடுத்தீர். ஆயினும்,
எனக்குத் தகுதி சிறிதும் இல்லை.
மன்னித் தருளுவீர்’’
என்று கூறித் தமக்குப் பதிலாய்
வக்கீல் ஒருவரை
ஏற்ப டுத்திக் கொடுத்து விட்டு
வீடு திரும்பினர்.





3135—6




# கிடைக்காத வேலை

வக்கீல் தொழிலில் கொஞ்சமுமே
வருவா யில்லை ஆதலினால்
மிக்க சிரமப் பட்டனரே;
வேறோர் தொழிலை நாடினரே.

'ஆங்கில மொழியை லண்டனிலே
அழகாய்க் கற்றுத் திரும்பிவந்தோம்.

ஆதலி னாலே பள்ளிதனில்
ஆங்கிலப் பாடம் நடத்திடவே

எவரும் அழைத்திட மாட்டாரோ?'
என்றே காந்தியும் ஏங்கினரே.

ஆங்கிலம் கற்றுக் கொடுத்திடவே
ஆசான் ஒருவர் தேவையென

அன்றோர் விளம்பரம் வந்ததுவே.
அதனை காந்தியும் கண்டனரே.

'தினமும் ஒருமணி ஆங்கிலத்தைத்
தெளிவாய்க் கற்றுத் தரவேண்டும்.

சம்பளம் எழுபத் தைந்தாகும்.
தக்கவர் மனுவை அனுப்பிடலாம்.'

பேரும் புகழும் மிகமிகவே
பெற்றதோர் பள்ளிக் கூடந்தான்,

இதனை அறிவித் திருந்ததனால்
எழுதி அனுப்பினர் காந்தியுமே.

"உடனே வருவீர் நேரினிலே.
உம்மைப் பார்க்க வேண்டு" மென

பதிலும் வந்து சேர்ந்திடவே
பார்க்க விரைந்தனர் மகிழ்வுடனே.

காந்தியை தலைமை ஆசிரியர்
கண்டதும், "நீங்கள் பி. ஏ. யா?"

என்றே கேட்க காந்தியுமே,
"இல்லை. லண்டன் மெட்ரிக்தான்.

லத்தீன் மொழியும் கற்றவன்நான்.
லண்டனில் படித்து வந்தவன்நான்"


என்றார். ஆயினும் இவர்பேச்சை
ஏற்றுக் கொள்ள வில்லைஅவர்.

"பி. ஏ. பட்டம் பெற்றவர்தான்
பேசிட வேண்டும் இதுபற்றி",

என்றே தலைமை ஆசிரியர்
கண்டிப் பாகக் கூறிடவே,

காந்தி ஏமாற் றத்துடனே
கைகள் இரண்டையும் பிசைந்தபடி

வீட்டை நோக்கித் திரும்பினரே;
வேதனை மிகவும் கொண்டனரே.



# தென் ஆப்பிரிக்கா பயணம்


“வக்கீல் தொழிலை விட்டுவிட்டு—நாம்
வாத்தியா ராக மனுப்போட்டும்
தக்க தகுதிகள் இல்லையென்றே—ஐயோ,
தள்ளிவிட் டாரே என்னசெய்வேன்?

பாரிஸ்டர் தொழிலை நடத்திடவே—இந்தப்
பம்பாயில் நம்மால் முடியாது.
ஊருக்குத் திரும்பிச் செல்வதுதான்—மிக
உத்தமம்” என்றே முடிவுசெய்தார்

அந்தச் சமயம் காந்தியுமே—தென்
ஆப்பிரிக் காவர வேண்டுமென்றே
வந்தது கடிதம் அண்ணனுக்கே—உடன்
மகிழ்ச்சி அடைந்தனர் காந்தியுமே.

ஆப்பிரிக் காவிலே ஒரு வழக்கு—அது
அப்துல்லா கம்பெனி யின் வழக்கு.
நாற்பதி னுயிரம் பவுன்வழக்கு—அதை
நடத்திட இவரை அழைத்தனராம்.


கப்பலில் காந்தியும் ஏறிச்சென்றூர்—மிகக்
களிப்புடன் டர்பன் நகர்அடைந்தார்.
அப்துல்லா துறைமுகம் வந்திருந்தார்—அவர்
அன்போடு காந்தியைக் கூட்டிச்சென்றூர்.



# தலைப்பாகைத் தகராறு

ஆப்பிரிக் காவுக்குச் சென்றதுமே
அடைந்திட்ட தொல்லைகள் பற்பலவாம்.
கேட்பவர் யாருமே இல்லையங்கே.
கேடுகள் செய்தனர் வெள்ளையர்கள்.

ஆப்பிரிக் காவிலே வாழ்ந்துவந்த
அருமைநம் இந்தியர் உரிமைகளைக்
காப்பாற்றிக் கொள்ள முடியாமல்
கலங்கிடக் கண்டனர் காந்தியுமே.



நீதிமன் றத்தில் தலைப்பாகை
நேர்த்தியாய் அணிந்து முதல்முதலில்
சா துவாம் காந்தி நுழைந்தனரே.
சட்டெனச் சீறினர், நீதிபதி.

"மன் றத்தி லேதலைப் பாகைவைத்து
வருவதை நானும் அனுமதியேன்.
இந்த விநாடியே பாகையைநீர்
எடுத்திடு வீர்" என்றார் நீதிபதி.

"இந்தியர் அணிந்திடும் பாகைதனை
எடுக்கவே மாட்டேன்" எனஉரைத்தே
அந்த இடம்விட்டு காந்தியுமே
ஆத்திர மாக வெளியில்வந்தார்.

வெள்ளையர் கொடுமையை முதல்முதலில்
வீரமாய் காந்தி எதிர்த்தனரே.
உள்ளம் வெதும்பினர் வெள்ளையர்கள்.
உவகை அடைந்தனர் இந்தியர்கள்.

# வெளியில் தள்ளினர்


டர்பன் நகரில் முதல் வகுப்புச்
        சீட்டு வாங்கியே
ரயிலில் ஏறிப் பயணம் செய்தார்
        நமது காந்தியே.
நிற்கும் சமயம் வழியில் உள்ள
        நிலையம் ஒன்றிலே
நிமிர்ந்து நடந்து வந்தான் ஒருவன்;
        வெள்ளைக் காரனே !

அந்த வெள்ளைக் காரன் காந்தி
        இருந்த பெட்டியில்
அடிஎ டுத்து வைத்த வுடனே
        கண்டான் காந்தியை.
"இந்தி யன்நீ முதல்வ குப்பில்
        ஏற லாகுமோ ?
இறங்கிச் சாமான் வண்டி ஒன்றில்
        ஏறு" என்றனன்.

“முதல் வகுப்பில் பயணம் செய்யச்
சீட்டு வாங்கியும்
முட்டை ஏற்றும் வண்டி தன்னில்
ஏற வேண்டுமோ ?
இதனை நானும் ஏற்க மாட்டேன்”
என்று காந்தியும்
எதிர்த்துப் பேசி விட்டு, அங்கே
அமர்ந்தி ருந்தனர்.


வெள்ளைக் காரன் பேச்சைக் கேட்டு
ரயில்வே அலுவலர்
விரைந்து வந்தார், அந்தப் பெட்டி
தன்னை நோக்கியே.
உள்ளே சென்று காந்தி யாரைப்
பார்த்தே உறுமினர்.
உடனே “இறங்கு, இறங்கு” என்றும்
ஆணை யிட்டனர்.

‘இறங்க மாட்டேன்’ என்று காந்தி
துணிந்து கூறவே
இழுத்துத் தள்ளப் போலீஸ் காரர்
உதவி கோரினர்.



தூரத ரென்று காந்தி கையைப்
பிடித்தி ழுத்துமே,
தடியன் அந்தப் போலீஸ் காரன்
வெளியே தள்ளினன்.

படுக்கை பெட்டி அனைத்தும் வெளியில்
எடுத்துப் போட்டனன்.
பார்த்துக் கொண்டே காந்தி கீழே
நிற்கும் வேளையில்,
அடுத்த நிலையம் தன்னை நோக்கி
ரயிலும் சென்றதே.
அன்று குளிரில் இரவு முழுதும்
அவதிப் பட்டனர் !





## தொல்லைகள் தொடர்ந்தன !

தொல்லைகள் இப்படி எத்தனையோ
 தொடர்கதை போல வளர்ந்தனவாம்.
நல்லவ ரான இந்தியர்கள்
 நாள்தொறும் வாடி வதங்கினராம்.


'கூலிகள்' என்றே இந்தியரைக்
 கூவி அழைத்தனர் வெள்ளையர்கள்.
கேலியும் கிண்டலும் செய்ததுடன்
 கேடுகள் செய்துமே வந்தனராம்.

ஒன்பது அடித்தால் இரவினிலே
ஒருவரும் நடமாடக் கூடாதென்றார்:
இந்தியர் வாக்கு வழங்கிடவும்
ஏதும் உரிமைகள் இல்லையென்றார்.

கட்டாய வரியாக மூன்றுபவுன்
கட்டவும் வேண்டுமாம் இந்தியர்கள்.
கட்டடம், நிலங்கள் வாங்குதற்கும்
சட்டங்கள் போட்டனர் வெள்ளையர்கள்.

இந்தியர் வாழ்ந்திடும் ஊரிலெல்லாம்
இருந்திடும் பதிவுப் புத்தகத்தில்
இந்தியர் கையெழுத் திடுவதுடன்
இரேகையும் வைத்திட வேண்டுமென்றார்.

"அடையாளச் சீட்டினைப் பெற்றிடுவீர்.
அதிகாரி கேட்டதும் காட்டிடுவீர்.
தடையேதும் கூறினால் சிறையினிலே
தள்ளுவோம்" என்றனர் வெள்ளையர்கள்.



## முதல் சத்தியாக்கிரகம்

கொடுமைகள் எல்லையை மீறிடவே
குமுறி எழுந்தனர் காந்தியுமே.
திடமாய் அவருடன் பற்பலபேர்
சேர்ந்து கிளம்பிட லாயினரே.

“அடையாளச் சீட்டுப் பெறுவதில்லை.
யாரும்கை ரேகை வைப்பதில்லை.
தடைகளை மீறுவோம்” என்றனரே;
தலைவராய் காந்தியைக் கொண்டனரே.

சத்தியப் போரை காந்தியுமே
    சாந்த முறையில் துவக்கினரே.
சத்தியம், உறுதி சேர்ந்ததனுல்
    'சத்தியாக் கிரகம்' என்றனரே.

சத்தியாக் கிரகம் செய்துவந்த
    தலைவாரம் காந்தியின் பின்னுலே,
பத்தா யிரத்துக்கும் மேலானோர்
    படையெனத் திரண்டு வந்தனரே.

காந்தியைச் சர்க்கார் பிடித்தனரே;
    கைதியாய்ச் சிறையில் அடைத்தனரே.
சேர்ந்து பலருமே காந்தியுடன்,
    சிறையினில் வாடி வதங்கினரே.

இந்தியப் பெண்களும் அஞ்சவில்லை.
    எதிர்த்துச் சிறைக்குமே சென்றனரே.
நந்தமிழ் நாட்டு வள்ளியம்மை
    நல்லவ ளும்அதில் சேர்ந்தனளே.



நேரிய வழியில் போர்புரிந்தார்;
    நீதியைக் காத்திடப் போர்புரிந்தார்.
சோர்வடை யாமலே போர்புரிந்தார்,
    தூயவர் காந்தி தலைமையிலே.

பலமுறை சிறையில் அடைத்துவைத்தும்
பணிய மறுத்தனர் இந்தியர்கள்.
உலகமே கண்டு வியந்ததுவே;
உத்தமர் காந்தியைப் போற்றியதே.


உரிமையைக் காத்திட எட்டாண்டு
உறுதியாய் இந்தியர் போரிடவே,
இறுதியில் அரசு பணிந்ததுவே.
ஏற்பட லாச்சே உடன்பாடு !

உரிமைகள் பற்பல பெற்றனரே,
உத்தமர் காந்தி முயற்சியினுல் !
தருமமே வெற்றி பெற்றதுவே,
சாந்த மகானது சக்தியினுல் !

'தென்னுப் பிரிக்காவில் இந்தியர்கள்
சேமமாய் இனிமேல் வாழ்ந்திடலாம்'
என்னும் இனியதோர் நிலைமையுமே
ஏற்பட லானது காந்தியினுல்.


அந்நிய நாட்டினில் இந்தியரின்
அல்லலைத் தீர்த்தபின் அண்ணலுமே
சொந்தநம் பாரத நாட்டினிலே
தொண்டு புரிந்திட ஆசைகொண்டார்.

இருபது ஆண்டுகள் மொத்தம்அவர்
இருந்தனர் ஆப்பிரிக் காவினிலே.
திரும்பிநம் தாய்த்திரு நாட்டினுக்கே
சேவை புரியவே வந்தனராம்.



# இந்தியா திரும்பினுர்


இந்தியா சேருமுன்னே—புகழ்
எங்கும் பரவியதாம்.
வந்ததும் மக்களெல்லாம்—கூடி
வாழ்த்தி வரவேற்ருர்.



காந்தி மகாத்மாவை—மக்கள்
காணத் துடித்தனராம்.
காந்தமாய் மக்களது—உள்ளம்
காந்தி கவர்ந்தனராம்.



ஆமதா பாத்திலிலே-சபர்மதி
ஆற்றங் கரைதனிலே,
சேமம் பெருகிடவே—அமைத்
தார்
சிறந்ததோர் ஆசிரமம்.



கல்வியைப் பெற்றிடலாம்—அங்கே
கைத்தொழில் கற்றிடலாம்.
நல்ல குணங்களெல்லாம்—பெற்று
நாட்டுக் குழைத்திடலாம்.

அண்ணனும் தம்பியும்போல்—பலர்
அன்புடன் வாழ்ந்துவந்தார்.
நன்மைகள் செய்திடவே—அவர்கள்
நாளும் பழகிவந்தார்.

நிலத்தை உழுதுவந்தார்—ராட்டை
நித்தமும் சுற்றிவந்தார்.
பலப்பல கற்றவரும்—அங்கே
பாமரர் போல்உழைத்தார்.


இந்தியப் பொருள்களையே—அவர்
என்றும் பயன்படுத்தி

வந்தனர். ஆதலினால்—தொழில்
வளர்ந்தது நாட்டினிலே.


காலையில் மாலையிலே—சேர்ந்து
கடவுளைத் தொழுதுவந்தார்.
வேலையை மதியாத—ஒரு
வீணரும் அங்கேஇல்லை.

ஹரிஜன மக்களுக்கும்—காந்தி
அங்கே இடம்அளித்தார்.
சரிசமம் யாவருமே—அங்கே
சாதிகள் ஏதும்இல்லை.

உண்மையே பேசுவது—எல்லா
உயிரையும் போற்றுவது
கண்ணென இவ்விரண்டை—காந்தி
கருதிட வேண்டுமென்றார்.



காந்தி மகானுடனே—அன்னை
கஸ்தூரி பாயும்அங்கே
சேர்ந்தே உழைத்தனராம்—உயர்
சேவைகள் செய்தனராம்.



# கொடிய சட்டம்


அந்நி யர்கள் இந்தி யாவை
　　அடக்கி ஆண்டு வந்ததால்,
ஐயோ, நமது தேச மக்கள்
　　அதிக துன்பப் பட்டனர்.
இந்தி யாவை அடைந்த உடனே
　　இந்த நிலைமை மாறவே
எண்ணி எண்ணிப் பார்த்து காந்தி
　　ஏற்ற வழிகள் தேடினர்.

*உலகப் போரில் எங்களுக்கே
　　உதவி செய்தால் நிச்சயம்
உரிமை பலவும் தருவோம், என்றே
　　உரைத்தார் வெள்ளைக் காரர்கள்.

---

* முதலாவது உலகப் போர்.

பலம் மிகுந்த நமது வீரர்
பலரும் படையில் சேர்ந்தனர்.
பாடு பட்டு வெற்றி பெற்றும்,
பலனைக் காண முடிந்ததா ?





இல்லை, இல்லை, வெள்ளை யர்கள்
ஏய்த்து விட்டார் நம்மையே.
"ஏதும் உரிமை அளிக்க மாட்டோம்"
என்றும் கூறி விட்டனர்.

தொல்லை கொடுக்கும் சட்டம் ஒன்றைத்
துரித மாகப் போட்டனர்.
சுதந்தி ரத்தைப் பற்றி ஏதும்
சொல்லக் கூடா தென்றனர்.

கூட்டம் போட்டுப் பேசி னாலே
குற்றம் என்று கூறினர்.
குறைகள் எடுத்துச் சொல்லு வோரைக்
கொடிய சிறையில் தள்ளினர்.
சாட்சி இன்றிக் கேள்வி இன்றித்
தரும நியாயம் இன்றியே,
தண்ட னைவி திக்க அந்தச்
சட்டம் உதவி செய்ததே.

"மிகவும் மோச மான சட்டம்
வெள்ளைக் காரர் போட்டது.
வீரத் துடனே அதை எதிர்த்தால்
வெற்றி நமக்கு நிச்சயம்.
அகிம்சை என்னும் ஆயு தத்தால்
அடைவோம், அந்த வெற்றியை.
ஆண்மை யோடு வருக ! வருக !"
என்ற ழைத்தார் காந்தியும்.

‘‘நன்றி கெட்ட ஆங்கி லேயர்
இன்னும் இங்கி ருப்பதோ ?
நாட்டை விட்டே அவர்கள் தம்மை
ஓட்ட வேண்டும் விரைவிலே.’’
என்று துடித்தே இளைஞர் பலரும்
எரிம லைபோல் குமுறினர்.
இந்தச் சமயம் நாடு முழுதும்
காந்தி சுற்றி வந்தனர்.





# சென்னையில் காந்திஜி

அன்பே வடிவான காந்திமகான்
ஆர்வமாய் நாட்டினைச் சுற்றுகையில்,
சென்ற இடமெல்லாம் மக்களுமே
'ஜே, ஜே' எனவர வேற்றனராம்.

சென்னையில் காந்திஜி தங்கினராம்,
சேலத்து ராஜாஜி வீட்டினிலே.
அன்று கனவிலே தோன்றியதாம்,
ஹர்த்தால் நடத்திடும் யோசனையே.

அகிம்சை முறையிலே தேசமெங்கும்
ஹர்த்தால் நடத்திட வேண்டுமென்றே
மிகவும் கவனமாய் காந்திமகான்
வேண்டுகோள் ஒன்றை விடுத்தனரே.

அண்ணல் குறித்த தேதியிலே
ஹர்த்தால் நடந்தது தேசமெங்கும்.
சின்னஞ் சிறிய ஊர்களிலும்
திறமையாய் ஹர்த்தால் நடந்ததுவாம்.

எந்தக் கடையும் திறக்கவில்லை.
எவருமே வேலைக்குச் செல்லவில்லை.
"இந்தியர் அனைவரும் ஒன்றுபட்டார்"
என்பதுணர்ந்தனர் வெள்ளையர்கள்.






## படுகொலை

நாட்டில் அமைதியாய் ஹர்த்தாலுமே
நடந்ததே. ஆயினும், வெள்ளையர்கள்
கூட்டங்கள் யாவும் தடுத்தனராம்.
குண்டாந் தடியால் அடித்தனராம்.

அடக்கு முறையை எதிர்த்திடவே
அமிர்த சரஸ்என்னும் நகரினிலே
படையென மக்கள் திரண்டனராம்.
பயமின்றி ஊர்வலம் சென்றனராம்.


நாலு புறமும் சுவர்கள் உள்ள
நடுவிலே சிறியதோர் வாசலுள்ள
'ஜாலியன் வாலா பாக்' எனும்ஓர்
சதுக்கத்தில் கூடியே பேசினராம்.



அந்தச் சதுக்கத்து வாசலிலே
ஆங்கில ஜெனரல் டயர்என்பான்,
எந்திரத் துப்பாக்கி கொண்டுவந்தான்;
இரக்கமில் லாமலே சுட்டுவிட்டான்!

ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும்
அலற அலறவே சுட்டுவிட்டான் !
நானூறு பேர்களைக் கொன்றுவிட்டான் !
நமனையும் அங்கே மிஞ்சிவிட்டான் !

இந்தக் கொடுமையைக் கேட்டதுமே
இரத்தம் கொதித்தது மக்களுக்கே.
வெந்தது காந்தியின் உள்ளமுமே,
வேதனைத் தீயுமே சுட்டதனுல் !



# ஒத்துழையாமை

ஒத்துழை யாமை இயக்கத்தினை
உடனேநம் காந்தி துவக்கினராம்.
எத்தனை யோபேர்கள் ஒத்துழைத்தார்,
இனிய தலைவராம் காந்தியுடன்.

பட்டம் பதவி துறந்தனராம்.
பள்ளியை மாணவர் விட்டனராம்.
சட்ட சபைக்குமே போகாமல்
தியாகங்கள் பற்பல செய்தனராம்.

அடக்கு முறையை எதிர்த்தனராம்.
அந்நியத் துணியைக் கொளுத்தினராம்.
தடைகளை யெல்லாம் மீறினராம்.
சாந்த வழியிலே சென்றனராம்.




## சௌரி சௌரா

இந்தச் சமயத்தில் சௌரிசௌரா
என்னும் நகரிலே மக்களெல்லாம்
வந்தனர் மாபெரும் ஊர்வலமாய்.
மனக்கொதிப் புற்றனர் ஆட்சியினர்.

வீதியில் சாதுவாய்ச் சென்றவரை
வேட்டை யாடவந்தார் சேவகர்கள்.
பாதி வழியில் தடுத்தனரே.
'பட்பட்' டெனவுமே சுட்டனரே.

ஆவேசங் கொண்டனர் மக்களெல்லாம்.
ஆத்திரத் தோடு கிளம்பினரே.
சேவகர் தங்கும் நிலையத்தையே
தீயிட்டுக் கொளுத்தினர் கோபத்திலே.


இருபத்தி ரண்டு சேவகர்கள்
எரிந்துமே சாம்பல் ஆயினரே.
வெறியிலே மக்கள் கொளுத்திவிட்டார்!
மிகமிக வேதனை காந்தியுற்றார்.

"அன்பு வழியிலே போர்புரிய
ஐயோ, என் மக்கள் அறியவில்லை.
இன்னமும் பக்குவம் அடையவில்லை
என்பதை நானும் உணர்ந்துகொண்டேன்.

பக்குவம் ஆகாத மக்களை நான்
பங்கு கொள்ளச் செய்தேன்; ஆதலினால்
மக்களை மக்களே கொல்லும்நிலை
வந்ததே! ஐயோஎன் குற்றம்" என்றார்.

தயக்கம் இல்லாமலே காந்திமகான்
தவறுக்குத் தாமே பொறுப்பு என்ருர்.
இயக்கம் எல்லாமே நிறுத்திவைத்தார்.
எங்கும் அமைதி நிலவச்செய்தார்.





## திட்டங்கள்

உலகமே இதுகண்டு போற்றுகையில்
உண்மை உணராத வெள்ளையர்கள்
கலகங்கள் யாவுக்கும் காந்திஜியே
காரணம் என்று பழித்தனரே.

அறவழி சென்றிடும் அண்ணலினை,
அன்பே வடிவான காந்தியினை
சிறையினில் ஈராண்டு வைத்திருந்தே
திரும்பவும் விடுதலை செய்தனரே.

சிறையி லிருந்து திரும்பிய தும்
தேச நலத்தினை எண்ணிஎண்ணி
அருமை மிகுந்தநல் திட்டமெல்லாம்
அன்புடன் காந்தி வகுத்தனரே.

"இந்துவும் முஸ்லீமும் ஒன்றுபட்டால்
இந்திய நாடு பலமடையும்.
இந்திய நாடு பலமடைந்தால்,
எவருக்கும் நாம்அஞ்சத் தேவையில்லை."

என்றுநம் காந்தி எடுத்துரைத்தும்,
இந்துவும் முஸ்லீமும் சண்டையிடக்
கண்டு மிகவும் வருந்தினரே.
கலகங்கள் யாவும் நிறுத்திடவே,

உண்ணு விரதம் இருந்தனரே.
ஓரிரு நாட்களா ? இல்லை,இல்லை;
எண்ணி இருபத் தொருநாட்கள்
இருந்தபின் அமைதி நிலவியதே !

∴ ∴ ∴

மனைவியும் மக்களும் வீட்டினிலே
வயிற்றுக் கில்லாமல் துடிக்கையிலே
அனுதினம் கள்ளைக் குடித்துவந்தோர்
அதிகம் இருந்தனர் நாட்டினிலே.

உள்ளம் தடுமாறச் செய்துவரும்
உடல்நலம் தன்னைக் கெடுத்துவரும்
கள்ளுக் கடைகளை மூடுதற்கே
காந்தி மறியல் துவக்கினரே.

∴ ∴ ∴

"அந்நியர் நம்மை அடிமையென்றால்
ஆத்திரப் பட்டே எதிர்த்திடும்நாம்
இந்திய மக்களில் ஹரிஜனரை
ஏனோ அடிமையாய் எண்ணுகின்றோம்.

ஆண்டவன் படைத்த குழந்தைகள்நாம்
அனைவரும் சமம்என எண்ணிடுவோம்?
தீண்டத் தகாதவர் யாருமில்லை.
சேர்ந்துநாம் வாழ்வோம்" எனஉரைத்தார்.


தாயில்லாக் குழந்தைகள் போல்மிகவும்
தவித்த ஹரிஜன மக்களுமே,
கோயிலில் சென்று தடைகளின்றிக்
கும்பிடச் செய்தனர் காந்தியுமே.

“ராட்டையில் தினமுமே நூற்றிடுவோம்.
நல்ல கதர்உடை கட்டிடுவோம்.
நாட்டினில் பஞ்சம் போக்கிடுவோம்.
நம்மவர் துயரம் தீர்த்திடுவோம்.

சொந்தநம் நாட்டுச் சகோதரர்கள்
சோற்றுக் கில்லாமல் தவிக்கையிலே,
அந்நிய நாட்டுத் துணிகளையே
அணிவது பாபம்” எனஉரைத்தார்.

கண்போல் கதரைக் கருதிவந்தார்;
கைராட்டை யால்தினம் நூற்றுவந்தார்.
உண்ணு விரதம் இருக்கையிலும்
ஒருநாளும் நூற்கா திருந்ததில்லை.





# எளிய வாழ்க்கை

நெற்றி வியர்வை நிலத்தில்விழ
நித்தம் உழைக்கும் உழவருமே
கட்டி யிருந்த கந்தலையே
கண்டனர் காந்தி மதுரையிலே.

வாடிடும் உழவர் நிலைமைகண்டு
வருந்திய காந்தியும், அன்றுமுதல்
ஆடை குறைக்க முடிவுசெய்தே,
அணிந்தனர் நாலு முழவேட்டி.

நித்தமும் கீதை படித்திடுவார்.
நெஞ்சாரப் பிரார்த்தனை செய்திடுவார்.
புத்தரும், ஏசுவும், நபிகளுமே
போதித்த உண்மை எடுத்துரைப்பார்.

“தாய்ப்பால் போலே அவசியமாம்
தாய்மொழி” என்றே உணர்த்திவந்தார்.
*தாய்மொழி தன்னில் சுயசரிதை
‘சத்திய சோதனை’ எழுதிவைத்தார்.

பற்பல மொழிகளைத் தெரிந்துகொண்டார்;
படிக்கவும் எழுதவும் அறிந்துகொண்டார்.
நற்றமிழ் மொழியையும் கற்றுவந்தார்.
நாவாரத் தமிழைப் புகழ்ந்துவந்தார்.

கடமைகள் மணிப்படி செய்துவந்தார்.
காலத்தைப் பொன்னாய்க் கருதிவந்தார்.
அடக்கமாய் என்றுமே வாழ்ந்துவந்தார்.
அளவோடு செலவுகள் செய்துவந்தார்.

ஆட்டுப் பாலுடன் வேர்க்கடலை
அனுதினம் காந்திஜி உண்டுவந்தார்.
நாட்டு மருத்துவ முறைகளிலே,
நலிந்த உடலையும் காத்துவந்தார்.

* குஜராத்தி மொழி



# தண்டி யாத்திரை

கடலில் நீரை எடுத்தே உப்புக்
காய்ச்சு தற்கும் வெள்ளையர்
தடை விதித்தார். அதனை மீறச்
சாந்த மூர்த்தி எண்ணினர்.

இரண்டு நூறு மைல்கள் தாண்டி
இருக்கும் கடலை நோக்கியே
அருமைத் தொண்டர் பலரும் சூழ
ஐயன் நடந்து சென்றனர்.

தளர்ந்த வயதில் காந்தி யடிகள்
தண்டிக் கிராமம் நோக்கியே
தளர்வு சிறிதும் இன்றி நடந்தார்,
தடியை ஊன்றி ஊன்றியே.

அறுபத் தோரு வயதில் கூட
அண்ணல் விரைந்து நடந்திடும்
அரிய காட்சி கண்டு மக்கள்
அவரைத் தொடர்ந்து சென்றனர்.

தண்டி தன்னில் உப்புக் காய்ச்சித்
தடையை காந்தி மீறவே,
எண்ணில் லாத தேசத் தொண்டர்
இதுபோல் உப்புக் காய்ச்சினர்.

தடியால் அடித்துத் தொண்டர் தம்மைத்
தாக்கி னூர்கள் சேவகர்.
பிடித்துச் சிறையில் அடைத்து வைத்தும்
பெரிதும் தொல்லை கொடுத்தனர்.

காந்தி யோடு தலைவர் பலரும்
கைது செய்யப் பட்டதால்,
சேர்ந்து நின்று கிளர்ச்சி செய்தார்
தேச மக்கள் யாவரும்.

நாட்டில் எங்கும் சட்ட மறுப்பு
நாளும் நடந்து வந்ததால்,
ஆட்சி யாளர் பணிந்து விட்டார்.
அறமே வெற்றி பெற்றது!

உரிமை தந்தார் உப்புக் காய்ச்ச
உடனே வெள்ளைக் காரர்கள்.
சிறையி லிருந்து வெளியே விட்டார்,
தேச பக்தர் தம்மையும்.



# இரண்டாம் உலகப் போர்

அகிலம் முழுதும் ஆண்டிட
ஆசை கொண்ட ஜெர்மனி
மிகவும் கொடிய போரிலே
வெறிபி டித்து இறங்கவே,

பிரிட்டன், பிரான்சு நாடுகள்
பெரிய படையைத் திரட்டின.
முறிய டிப்போம் என்றன;
மூர்க்க மாக எதிர்த்தன.

இந்தச் சண்டை தன்னையே
இரண்டாம் உலகப் போர்என
அந்த நாளில் அழைத்தனர்;
அதிகத் துன்பப் பட்டனர்.

"அடிமை யாக மக்களை
ஆக்கு தற்கே ஜெர்மனி
கொடிய போரைத் தொடுத்தது.
குற்றம் அவர்கள் பக்கமே"

என்றூர் ஆங்கி லேயர்கள்.
இந்தி யாவும் தம்முடன்
ஒன்று சேர்ந்தி ருப்பதாய்
உலகம் அறியக் கூறினர்.



அடிமை யாக நம்மையே
அடக்கி ஆளும் வெள்ளையர்,
“அடிமைத் தனத்தைப் போக்கவே
அவத ரித்தோம்” என்றனர்.

நமது நாட்டு வீரரை
    ராணு வத்தில் சேர்த்தனர்.
நமது மக்க ளிடத்திலே
    நல்ல நிதியும் திரட்டினர்.

"போரில் வீரர் சேர்வதும்
    பொன்னும் பொருளும் கொடுப்பதும்
வேறே உதவி செய்வதும்
    வேண்டாம்" என்றார் காந்திஜி.






## வெள்ளையனே, வெளியேறு!

வெள்ளையர் வெற்றி பெற்றிடவே—நம்
வீரர் உயிரைக் கொடுப்பதுவோ?
உள்ளம் கொதித்தனர் இந்தியர்கள்—எல்லா
ஊரிலும் கிளர்ச்சிகள் செய்தனரே.


"போரில் இந்தியர் உதவிசெய்தால்—
நாங்கள்
பொன்னான விடுதலை தருவோம்''என்றே
கூறினர் வெள்ளையர். ஆயினுமே—காந்தி
கொஞ்சமும் அவர்களை நம்பவில்லை.

''விடுதலை தாருங்கள். இல்லையெனில்—உடன்
வெளியேறிச் செல்லுங்கள்,
நாட்டைவிட்டே.
படையோடு அந்நியர் வந்திடினும்—எங்கள்
பாரத நாட்டினைக் காப்போம்'' என்றார்.

தொல்லைகள் தீரவே வெள்ளையரின்—ஆட்சி
தொலைந்திட காந்தி விரும்பினராம்.
'வெள்ளைய னேவெளி யேறு'என்றே—அவர்
வீர முழக்கமும் செய்தனராம்.

'வெள்ளைய னேவெளி யேறு'என்றே—மக்கள்
வீதிகள் எங்கும் முழங்கினராம்.
பள்ளியில் சென்று படித்துவரும்—சிறு
பாலரும் கூடச் சேர்ந்தனராம்.





# கஸ்தூரி மறைந்தார்

வெள்ளையர் இந்நிலை கண்டனரே—உடன்
மிகமிகக் கோபமும் கொண்டனரே.
கள்ளமில் லாதநம் காந்திமகான்—தன்னைக்
கைதியாய் மீண்டும் அடைத்தனரே.



3135—9

கணவனே தெய்வம் என்றுதொழும்—அன்னை
கஸ்தூரி பாயையும் கைதுசெய்தே
துணையாய் வைத்தனர் காந்தியுடன்—ஆனால்
துக்கம் நிகழ்ந்ததே அச்சிறையில்!

சிறையினில் வாழ்ந்து வருகையிலே—பெருந்
தியாகி கஸ்தூரி மறைந்தனராம்.
பொறுமை மிகவும் உடையவராம்—நல்ல
பொன்போல் குணங்கள் நிறைந்தவராம்.

காந்தி மடியில் தலையைவைத்தே—அன்னை
கஸ்தூரி பாயும் பிரிந்துவிட்டார்.
சாந்தி நிலவும் முகத்தினையே—கண்டு
தாங்கொணு வேதனை காந்தியுற்ருர்.

விளையாடும் தோழியாய் உதவவந்தார்
—நாட்டின்
விடுதலைப் போரிலும் உதவிநின்ருர்.
எழுபத்தைந் தாவது வயதினிலும்—அவர்
இணையில்லாத் துணையாய் இருந்துவந்தார்.

கண்களைக் காக்கும் இமைகளைப்போல்—மகான்
காந்தியை என்றுமே காத்துவந்தார்.
அன்னை கஸ்தூரி மறைந்தசெய்தி—நாட்டை
அளவில்லாத் துயரினில் ஆழ்த்தியதே.



# புரட்சி

பெரும்பெரும் தலைவர்கள் யாவரையும்
—சர்க்கார்
பிடித்துச் சிறைகளில் வைத்திடவே,
பொறுமை இழந்தனர் மக்களுமே—பெரும்
புரட்சியை நாட்டில் துவக்கினரே.

''அந்நியர் இன்னமும் ஆளுவதோ—இந்த
அநியாயம் தன்னைச் சகிப்பதுவோ?
இந்திய நாடுநம் இந்தியர்க்கே''—என்று
இடிபோல் முழங்கினர் யாவருமே.

கொடியுடன் ஊர்வலம் வந்தனரே—எங்கும்
கூட்டங்கள் கூட்டியும் பேசினரே.
தடியடி குண்டுகள் யாவையுமே—அவர்
தாங்கிட முன்வந்து நின்றனரே.

குண்டாந் தடிக்குமே அஞ்சவில்லை—பொல்லாக்
குண்டு வெடித்துமே ஓடவில்லை.
''இன்றேஎம் பாரத நாட்டைவிட்டு—நீங்கள்
ஏறுவிர் கப்பலில்'' என்றனரே.

''வந்த வழியிலே சென்றிடுவோம்—வேறு
வழியில்லை. மக்கள் விழித்துவிட்டார்''
என்ற முடிவுக்கு வந்தனரே—நம்மை
இருநூறு ஆண்டுகள் ஆண்டவர்கள்.

சிறையில் இருந்தோர் அனைவரையும்—உடன்
திறந்த வெளியில் அனுப்பினரே.
அருமைத் தலைவர்கள் கைகளிலே—நாட்டின்
ஆட்சியைத் தரவும் இசைந்தனரே.

# நாடு பிரிந்தது !

அன்பு வழியிலே காந்திமகான்—தம்
ஆயுள் முழுவதும் பாடுபட்டும்
என்றும் எதிரிபோல் நாட்டினிலே—சில
இந்துவும் முஸ்லீமும் சண்டையிட்டார்.

இந்துவும் முஸ்லீமும் ஒன்றுபட்டால்—நாங்கள்
இனிய விடுதலை தருவோமென்றே
அந்நிய வெள்ளையர் கூறிடவே—காந்தி
அமைதியைக் காத்திடப் பாடுபட்டார்.

∴ ∴ ∴

"இந்துவும் நாங்களும் ஒன்றாக
இணங்கி வாழ முடியாது.
சொந்தமாய் நாடு வேண்டும்" என்றார்,
தொடர்ந்து முஸ்லீம் லீகினரும்.

"இந்திய நாட்டைப் பிரித்திடுவீர்.
இரண்டு துண்டாய்ச் செய்திடுவீர்.
சொந்தமாய் நாடு கிடைத்தபின்பே
தொல்லைகள் தீர்ந்திடும்" என்றனரே.



''அன்னையாம் நாட்டைப் பிளப்பதுவோ !
அண்ணனும் தம்பியும் பிரிவதுவோ !
ஒன்று பட்டாலே உயர்வடைவோம் ;
உணருவீர்'' என்றார் காந்தியுமே.

ஒன்றாக வாழ நினைக்கவில்லை.
உறவையும் அவர்கள் மதிக்கவில்லை.
அன்றுடம் கலகம் நடந்ததுவே.
அதுகண்டு காந்தி கலங்கினரே.

உரிமைகள் பெற்றிட வெள்ளையரை
ஒன்ருய் எதிர்த்த சகோதரர்கள்
அருமையாம் விடுதலை நெருங்குகையில்
ஐயோ, தமக்குள் அடித்துக்கொண்டார் !

மனிதரை மனிதரே குத்துவதை,
வாளிஞல் வெட்டி வீழ்த்துவதை,
புனிதராம் காந்திஜி கேட்டதுமே,
புழுவெனத் துடியாய்த் துடித்தனரே.

பெருமை மிகுந்தஇம் மண்ணினிலே
பிறந்து வளர்ந்தவர் தங்களுக்குள்
சிறிதுமே ஒற்றுமை யில்லாமல்
சிந்திய ரத்தமும் கொஞ்சமில்லை !

வங்காளம், பீகார் மாநிலத்தில்
மக்கள் கலகம் அடங்கிடவே,
அங்கெல்லாம் காந்தி நடந்தனரே.
அல்லும் பகலும் அலைந்தனரே.


ஊரில் கலகம் அடங்கிடவே
உயிரையும் கூட மதியாமல்,
தீரமாய் வெறியர் மத்தியிலும்
சென்றனர் அண்ணல் காந்தியுமே.

துள்ளாத வயதிலே கோல்ஊன்றித்
தளர்நடை போட்டு காந்திமகான்
பொல்லாத வெறியர் மத்தியிலே
புகுந்துமே அன்பைப் பரப்பினராம்.

என்னதான் காந்தி எடுத்துரைத்தும்
"இந்திய நாட்டைப் பிரித்திடுவீர்"
என்றுமே லீகினர் கூறிவந்தார்.
இம்மியும் விட்டுக் கொடுக்கவில்லை !

கலகம் அடங்கினால் போதுமென்றே
கடைசியில் இந்தியக் காங்கிரசின்
தலைவர்கள் சம்மதம் தந்துவிட்டார்,
தாய்த்திரு நாட்டைப் பிரிப்பதற்கே.

பாரதம், பாகிஸ்தான் நாடுகளாய்ப்
பாகப் பிரிவினை செய்துவிட்டார் !
வேறு வழியின்றி காந்தியுமே
வேதனை தன்னைப் பொறுத்திருந்தார்.




# வெள்ளையர் வெளியேறினர் !

பாரத புண்ணிய பூமியினைப்
　　பாகப் பிரிவினை செய்த பின்னர்,
கோரிய வண்ணம் சுதந்திரத்தைக்
　　கொடுத்திட வெள்ளையர் முடிவுசெய்தார்.

அருமைத் தலைவர்கள் கைகளிலே
　　ஆட்சிப் பொறுப்பினை ஒப்படைத்தே,
திரும்பினர் ஊருக்கு வெள்ளையர்கள்;
　　தேசம் மகிழ்ந்திடச் செய்தனரே.

மக்களுள் மாணிக்கம் நேருஜியும்,
　　மதிநுட்பம் மிக்கநம் ராஜாஜியும்,
பக்க பலமாக ராஜன்பாபு
　　பட்டேலுடன் பொறுப் பேற்றனரே !



# விடுதலை பெற்றோம்

வெள்ளையர் ஆட்சி முடிந்ததென
விடுதலை நாமும் அடைந்தோமென,
துள்ளிக் குதித்தனர் சிறுவரெல்லாம்;
சுதந்திர நாளைக்கொண் டாடினரே.


சின்னஞ் சிறுவர்கள் யாவருமே
சேர்ந்தனர் பள்ளியில் ஒன்றாக.
வண்ண வண்ணப்பூ, காகிதத்தால்
வகைவகை யாக அலங்கரித்தார்.

சட்டையில் சின்னக் கொடிஅணிந்து,
தாயின் மணிக்கொடி ஏற்றிவைத்து
சுற்றிலும் நின்று வணங்கினரே ;
சுதந்திர தேவியை வாழ்த்தினரே.


ஏழை எளியோரும் செல்வர்களும்
இனிதாய்க் கூடிக்கொண் டாடினரே.
வாழை மரங்களை நட்டனரே.
வாசலில் கோலங்கள் இட்டனரே.

வழியெல்லாம் தோரணம் கட்டினரே.
வளைவுகள் எங்கும் அமைத்தனரே.
அழகு படுத்தினர் ஊரையெல்லாம்
ஆனந்தம் பொங்கி வழிந்ததுவே.

கற்கண்டு, மிட்டாய் வழங்கினரே.
கதர்உடை கட்டி மகிழ்ந்தனரே.
அற்புதம் செய்தனர் காந்திஎன்றே
அகிலம் முழுவதும் போற்றியதே.



சுதந்திரம் வாங்கியே தந்தவராம்
தூயவர் காந்தி படத்தினையே
விதவித மாக அழகுசெய்தே
வீடுகள் தோறும் வணங்கினரே.



ஊர்வலம் வந்தனர் அணிஅணியாய்
உயர்த்திப் பிடித்த கொடிகளுடன்.
பாரத தேசத் தந்தையினைப்
பலகோடி உள்ளங்கள் வாழ்த்தினவே.

தேசம் விடுதலை பெற்றிடவே
    தியாகம் புரிந்தோர் அனைவரையும்
பாசத் துடன்மக்கள் போற்றினரே.
    பாடிப் புகழைப் பரப்பினரே.

'எல்லாரும் இந்நாட்டு மன்னர்களே'
    என்றநம் பாரதி வாக்கினையே
எல்லாரும் எண்ணித் தலைநிமிர்ந்தார்.
    'எவர்க்கும் அடிமைநாம் இல்லை'யென்றார்.

குண்டு, துப்பாக்கிகள் ஏதுமில்லை.
    கோரமாய் யுத்தமும் செய்யவில்லை.
அண்ணலாம் காந்திஜி காட்டிவந்த
    அகிம்சை வழியிலே வெற்றிபெற்றோம்.

கத்திகள் ஏதுமே வீசவில்லை.
    காத்திடக் கேடயம் ஏந்தவில்லை.
யுத்த களத்திலும் நிற்கவில்லை.
    உத்தம வழியிலே வெற்றிபெற்றோம்.

சாந்தப் போரிலே வெற்றிபெற்றோம்.
    சத்தியப் போரிலே வெற்றிபெற்றோம்.
காந்தி வழியிலே வெற்றிபெற்றோம்.
    கருணை வழியிலே வெற்றிபெற்றோம்.



## ஜோதி மறைந்தது !

என்றுமே மாலை வேளைகளில்
எங்குதான் காந்தி இருந்திடினும்,
ஒன்ருய்க் கூடிப் பிரார்த்தனைகள்
உள்ளம் உருக நடத்திடுவார்.

*அன்று மாலை டில்லியிலே
ஐந்து மணிசுமார் வேளையிலே
அன்புச் சுடராம் காந்தியுமே
ஆண்ட வனைத்தொழ வந்தனராம்.

---

*30—1—1948

அந்தச் சமயம் காந்திமகான்
அருகில் ஒருவன் மெல்லவந்தான்.
வந்தவன் இரண்டு கைகளினால்
வணங்கி நல்லவன் போல்நடித்தான்.

பாயும் புலியென எண்ணவில்லை;
பசுவென மக்கள் நம்பிவிட்டார்.
தீயவன், அங்குள்ளோர் பார்க்குமுன்னே
திடுமென காந்தியைச் சுட்டுவிட்டான் !

காந்தியை ஐயோ, சுட்டுவிட்டான் !
கருணா மூர்த்தியைச் சுட்டுவிட்டான் !
மாந்தருள் தெய்வத்தைச் சுட்டுவிட்டான் !
மாபெரும் பாவி சுட்டுவிட்டான் !



காந்தியின் புனிதப் பொன்உடலில்
கயவனின் குண்டு பாய்ந்ததுமே
சாந்தம் தவழும் முகத்துடனே
சாய்ந்தனர் 'ஹேராம்' என்று சொல்லி.

கோபுரம் கீழே சாய்ந்ததுபோல்
குலுங்கும் பழமரம் வீழ்ந்ததுபோல்
பாபுநம் காந்தி புனிதஉடல்
பாதகன் செயலால் சாய்ந்ததையோ!

தங்க நிலவு மறைந்தது போல்
சட்டென இன்னிசை நின்றதுபோல்
மங்கல தீபம் அணைந்ததுபோல்
மாந்தருள் தெய்வம் மறைந்ததையோ!

அறவழி காட்டிய பேரொளியை,
அன்பு வடிவாம் மாமணியை,
குறளிலே கூறிய பண்பனைத்தும்
கொண்டவர் தம்மைக் கொன்று
விட்டான்!

தெய்வ மகனாய்ப் பிறந்தவரை,
தேசப் பிதாவாய்த் திகழ்ந்தவரை,
வையகம் போற்றிட வாழ்ந்தவரை
வஞ்சகன் சுட்டுக் கொன்றுவிட்டான்!

உலகமே போற்றிடும் உத்தமரை,
ஊருக்கு நித்தம் உழைத்தவரை,
கலகமே வேண்டாம் என்றவரை,
கயவன் சுட்டுக் கொன்றுவிட்டான்!

எந்த மதத்தையும் ஒன்றெனவே
எண்ணி மதித்திடும் காந்தியினை
இந்து மதத்தின் விரோதியென
ஏனோதான் பாதகன் எண்ணி
விட்டான்!

எங்கும் கிடைக்காத பொக்கிஷத்தை
இந்திய தேசம் இழந்ததையோ!
பொங்கி வழிந்திடும் கருணையினைப்
பூவுல கெல்லாம் இழந்ததையோ!

கடவுளைத் தொழுதிடக் கூடிநின்றோர்
காந்தி இறந்ததைக் கண்டதுமே,
துடிதுடித் தழுத காட்சியினைச்
சொல்லிட இங்கே வார்த்தையில்லை.

ஐயன் மறைந்ததைக் கேட்டதுமே
அதிர்ச்சி அடைந்தனர் மக்களெல்லாம்.
கையைப் பிசைந்து திகைத்தனரே;
கண்ணீர் விட்டுக் கதறினரே.

புன்னகை தவழும் பொன்முகத்துப்
புண்ணிய காந்தித் தாத்தாவை
என்றுநாம் இனிமேல் காண்போமென
ஏங்கி அழுதனர் பிள்ளைகளும்.

தேசப் பிதாவை இழந்தோமெனச்
சித்தம் கலங்கினர் இந்தியர்கள்.
ஆசிய ஜோதி மறைந்ததென
அகில உலகும் அழுததுவாம்.





# கண்ணன் சொல்கிறான்


காந்தி கதையைக் கேட்டேன்—அண்ணா
கண் கலங்கி விட்டேன்.
சாந்த மூர்த்தி வழியே—என்றும்
தங்க மான வழியாம்.

உண்மை, அகிம்சை இரண்டும்—அவர்
உயர்ந்த கொள்கை ஆகும்.
கண்ணைப் போல அவற்றை—நானும்
கருதிக் காத்து வருவேன்.


மாந்த ருக்குள் தெய்வம்—அவர்
வழியைப் போற்றி நடப்பேன்.
காந்தி போல வாழ்வேன்—நல்ல
கருணை மனிதன் ஆவேன்.

‘சிறந்த மனிதர் என்றே—எட்டுத்
திசையும் போற்றும் காந்தி
பிறந்தார் நமது நாட்டில்’—என்ற
பெருமை நானும் அடைவேன்.

நமது நாட்டு அரசை—இன்று
நாமே ஆளச் செய்தார்.
இமயம் போல காந்தி—புகழ்
என்றும் வாழ்க! வாழ்க!




பாட்டிலே
காந்தி கதை


குழந்தைக் கவிஞர்
அழ. வள்ளியப்பா



காந்தி மகாத்மாவின் கதையைக் கண்ணனுக்கு அவனுடைய அண்ணன் அழகாக எடுத்துக் கூறுகிறார்; எளிய நடையில், இனிய சந்தங்களில் பாட்டாகக் கூறுகிறார்!

"குழந்தைகளின் உள்ளமென்னும் பீடத்தில் காந்தியின் புனித உருவத்தை நிறுத்துவதற்கு இதைவிடச் சிறந்த கருவி வேறு ஏதும் இல்லை. இதைப் பாடலாம்; தாளம் போட்டு ஆடலாம்; காந்தியின் தகைமையை எண்ணிப் பெருமை கொள்ளலாம்; நாமும் இப்படி வாழ வேண்டும் என்ற ஆர்வம் கொள்ளலாம். குழந்தைகளுக்கு ஏற்ற புத்தகம்."

–இவ்வாறு கூறிப் பாராட்டுகிறார் செந்தமிழ்ச் செல்வர் உயர்திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள்.




**பாரி நிலையம்**

**சென்னை-108**